
# வானவில்

VAANAVIL
ISSUE – 15 MARCH 2012

இதழ் - 15 பங்குனி 2012


# இலங்கைக்கு எதிரான அமெரிக்கத் தீர்மானம் நிறைவேற்றம்!

## இந்தியா காலை வாரியதா? அல்லது சூழ்நிலைக் கைதியாகியதா?




ஜெனிவா மனித உரிமைப் பேரவையின் 19வது கூட்டத்தொடரில் 2012 மார்ச் 21ஆம் திகதி இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானம், பெரும்பான்மை வாக்குப் பலத்துடன் நிறைவேற்றப்பட்டுள்ளது. தீர்மானத்துக்கு ஆதரவாக 24 நாடுகளும், எதிராக 15 நாடுகளும் வாக்களித்துள்ளன. 8 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. அமெரிக்கத் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்த நாடுகளில் இந்தியா முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

இந்தத் தீர்மானம் வெளித் தோற்றத்துக்குப் பார்க்கையில் இலங்கைக்கு உதவுவது போலத் தோன்றினாலும், உண்மையில் இதை ஒரு 'சீனி பூசிய தோட்டா' என்றுதான் சொல்ல வேண்டும். இலங்கை நியமித்த கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்குக்கான ஆணைக்குழு அறிக்கையிலுள்ள பரிந்துரைகளை, இலங்கை அரசாங்கம் அமுல்படுத்த வேண்டும் என அமெரிக்கத் தீர்மானம் வலியுறுத்தியுள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை வெளியிடப்பட்டு 3 மாதங்களே ஆகியுள்ள சூழ்நிலையில், அரசாங்கம் அதை அமுல்செய்ய முயற்சிகளை ஆரம்பித்துள்ள நிலையில், அமெரிக்காவும் ஏனைய மேற்குலக நாடுகளும் இலங்கைக்கு போதிய கால அவகாசம் வழங்காமல் இத்தகைய ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்ததின் உள்ளாந்த நோக்கம், நிச்சயமாக சந்தேகத்துக்கு உரிய ஒன்றாகவே இருக்கின்றது.

முதலில் அமெரிக்கா கொண்டு வர உத்தேசித்த தீர்மானம், இலங்கை அரசு இறுதி யுத்த காலத்தில் இழைத்ததாகக் கூறப்படும் போர்க்குற்றங்களை கண்டிப்பதாகவும், ஐ.நா.செயலாளர் பான் கீ மூன் தனக்கு ஆலோசனை வழங்குவதற்காக நியமித்த தருஸ்மன் குழு தெரிவித்த ஆலோசனைகளின் அடிப்படையில் சர்வதேச விசாரணைக்குழு ஒன்றை அமைக்க வேண்டும் எனக் கோருவதாகவும் இருக்கும் எனச் சொல்லப்பட்டது. ஆனால் அத்தகைய ஒரு தீர்மனத்துக்கு பெரும்பாலான நாடுகள் ஆதரவளிக்கத் தயாரில்லை என அறிந்துகொண்ட பின்னர்தான், அமெரிக்கா இலங்கையின் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்த வேண்டும் என ஒரு தீர்மானத்தைத் தந்திரோபாயமாகக் கொண்டுவந்ததாகத் தெரியவருகிறது.

அப்படியாகத் தந்திரோபாய ரீதியில் கொண்டு வந்த அமெரிக்காவின் தீர்மானத்துக்குக்கூட, அவர்கள் எதிர்பார்த்த ஆதரவு கிடைக்கவில்லை என்பதையே வாக்களிப்பு முடிவுகள் எடுத்துக்காட்டுகின்றன. மிகப்பெரிய வல்லரசு நாடான அமெரிக்கா தனது முழு வல்லமையையும் பயன்படுத்தி, சின்னஞ்சிறு நாடான இலங்கைக்கு எதிராகக் கொண்டுவந்த ஒரு தீமானம், கிட்டத்தட்ட அரைவாசி வாக்குகளையே

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க…

# தரங்கெட்டவர்களின் ஆதரவு தேவையில்லை

தமிழகத்தில் அண்மைக்காலமாக இலங்கையிலிருந்து தமிழகத்திற்கு விஜயம் செய்யும் புலிகளுக்கு சார்பற்றவர்களை (இவர்கள் இலங்கை சிங்கள சமூகத்தை சேர்ந்தவர்களாக இருப்பார்கள் அல்லது ஏதோவிதத்தில் இலங்கை அரசுடன் தொடர்புடையவர்களாக இருப்பார்கள்) முற்றுகையிட்டு, மிரட்டி தமிழகத்திலிருந்து வெளியேற்றும் சம்பவங்கள் நடந்து வருகின்றன. அண்மையில் நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்து குற்றவியல் துறை சார்பில் அனைத்துலக பெண்கள் நாளை முன்னிட்டு 'போதை பழக்கமும், குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களும்' என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்குக்கு உரையாற்ற வந்திருந்த கொழும்பு பல்கலைக்கழக சட்டத்துறை பேராசிரியை ஜீவா நிரியெல்ல மீதும் இந்தக் குற்றம் புரியப்பட்டுள்ளது. இதில் மிகக்கேவலமான விடயமென்னவெனில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பிரமுகர் சேவியர் தலைமையில் வந்த தமிழ் குண்டர்களே இலங்கை பேராசிரியை கருத்தரங்கு மண்டபத்திலிருந்து வெளியேற்றி உள்ளனர்.

2009 இல் இலங்கையில் புலிகள் முற்றுமுழுதாக தோற்கடிக்கப்பட்ட பின்னரே இலங்கையர்களை வெளியேற்றும் சம்பவங்கள் தமிழகத்திலுள்ள சிறு குழுவினரால் முடுக்கிவிடப்பட்டுள்ளன. இந்த குழுவினருக்கு வை.கோபாலசாமி, நெடுமாறன் மற்றும் சீமான் வகையறாக் கோஸ்டிகளும் முன்னர் புரட்சிகர 'இடதுசாரியம்' பேசி தற்போது தமிழ் தேசியவாதத்தை தூக்கிப்பிடித்திருப்பவர்களும் பின்னணியில் உள்ளனர். எல்லா சம்பவங்களிலும் பத்துப்பதினைந்து பேர் கொண்ட குழுவினரே சம்பந்தப்பட்டுள்ளனர். ஆனால் ஏதோ முழுத்தமிழகமே புலிகளுக்கு சார்பற்றவர்களை வெளியேற்றும் போராட்டத்தில் வரிந்து கட்டிக்கொண்டு நிற்பதான பிரமையை ஏற்படுத்தும் வகையில் தமிழகத்து 'பெரும்' 'சிறு' ஊடகத்திலிருந்து புலம்பெயர் புலிசார்பு ஊடகங்கள்வரை இச்செய்திகளை வெளியிடுகின்றன.

'இலங்கை அரசு தமிழர்கள் மீது போர்க்குற்றம் புரிந்துள்ளது, எனவே சிங்கள சமூகத்தை சேர்ந்தவர்களையும் தற்போதைய இலங்கை அரசுடன் தொடர்புடையவர்களையும் தமிழகத்தினுள் வர அனுமதிக்கக்கூடாது' என்பதே இந்த குழுவினரின் சுலோகங்களாக தெரிகின்றது. அப்படியானால் இந்திய இராணுவம் 1987 – 1990 ஆண்டு காலப்பகுதியில் புலிகளுடனான யுத்தத்தில், சாதாரண தமிழர்கள் மீதும் பாரிய போர்க்குற்றங்களை நிகழ்த்தினார்கள் என்பது எல்லோரும் அறிந்த விடயமே. அப்போது இவர்கள் தமது சொந்த இராணுவத்திற்கு எதிராக ஏன் இவ்வளவு ஆக்கிரோசமாக எழவில்லை? இலங்கையில் வாழும் சகல இன மக்களுக்கும் தமிழகத்திற்கும் சரித்திரபூர்வமான நீண்டகால வரலாற்று தொடர்புகள் இருந்து வந்துள்ளன. இதனை தற்போதைய தமிழகத்து சினிமா அரசியல்வாதிகள் இலங்கை தமிழ் மக்களுக்கும் தமிழகத்திற்கும் மாத்திரமே சரித்திரபூர்வமான உறவுப்பாலம் இருந்ததாக குறுகிச் சித்தரித்து, இலங்கை தமிழ் மக்களுக்காக நீலிக்கண்ணீர் வடிக்கின்றனர்.

ஜனவரி மாதத்தில் யாழ்பாணத்திற்கு விஜயம் செய்த முன்னாள் இந்திய ஜனாதிபதி டாக்டர் அபதுல் கலாம் தனது யாழ்பாணத்து விஜயம் பற்றி திருப்திகரமான செய்திகளையே வெளியிட்டுள்ளார். இலங்கை தமிழர்கள்பற்றி கரிசனை கொண்டிருக்கும் ஏனையவர்களும் இவரை முன்மாதிரியாக பின்பற்றி இலங்கை சென்று அந்நாட்டு மக்களை ஏன் சந்தித்து வரக்கூடாது? போர் முடிந்துவிட்டது, தமிழ் மக்கள் நிம்மதியாக வாழுகிறார்கள், இப்போது இலங்கையிலுள்ள நிலைமையை நேரில்வந்து பார்க்கும்படி கருணாநிதிக்கும் ஜெயலலிதாவிற்கும் இலங்கை அரசு பகிரங்கமாக அழைப்புகளை விடுத்தது. இந்த அழைப்புகளை உதாசீனம் செய்துவிட்டு இலங்கை தமிழர்கள் பற்றி பேச இந்த இருவருக்கும் என்ன உரிமை இருக்கின்றது?


1983களின் பின்னர், மிகவும் சின்னஞ்சிறிய இலங்கைக்கு எதிரான கிளர்ச்சிக்கு தமிழ் 'பொடியன்களுக்கு' பின்தளமைக்கவும், பின்னர் அவர்களுக்கு ஆயதப்பயிற்சியும் அளித்து 26 வருடகால யுத்தத்திற்கு வழிகோலிய இந்தியப் பின்னணியின் வடுக்கள் இன்னமும் ஆறவில்லை. இந்த கசப்பான அனுபவங்களிலிருந்து, இந்தியவாழ் தமிழ் இனத்தவர்கள் இலங்கை தமிழ் இனத்தவர்கள் மீதான நியாயபூர்வமான கரிசனைகளை கொண்டிருப்பதையே, இலங்கையின் சகல இன மக்களும் விரும்புகிறார்கள்.

## வானவில்

**தொடர்பு முகவரி:** 'வானவில்' இதழுக்கு கட்டுரைகள், துணுக்குகள், தகவல்கள், விமர்சனங்கள், ஆலோசனைகள் என்பனவற்றை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் பின்வரும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
sunvaanavil@gmail.com

# தமிழ் இலக்கியத்தில் விஜய பாஸ்கரனின் ‘சரஸ்வதி’ காலம்

*செ.கணேசலிங்கன்*



செ.கணேசலிங்கன்

தமிழ் சஞ்சிகைகளை இரண்டாகப் பிரித்துப் பார்க்கலாம். வணிக இதழ்கள், சிற்றிதழ்கள் என்று. முதலாளித்துவ வளர்ச்சிப் போக்கில் கலை இலக்கியங்களும் வணிக விற்பனைப் பண்டமாகி விடுகின்றன. இன்று நாம் கலை இலக்கிய வணிகக் கடலில் நீந்திக் கொண்டிருக்கிறோம். ஆயினும் நாம் இடையிடை பின்னோக்கிப் பார்க்கின்றோம். அவ்வேளை கலை இலக்கிய தடம் பதித்த சில சிற்றிதழ்களை எம்மால் எண்ணிப்பார்க்க முடிகிறது. மணிக்கொடி, சரஸ்வதி, சாந்தி போன்ற இதழ்களை, தமிழ் – கலை இலக்கிய வரலாறு மறந்துவிட முடியாது.

இவற்றுள் ‘மணிக்கொடி’ எல்லோராலும் பேசப்படுவது. ‘மணிக்கொடி’ சிறுகதை என்ற வடிவத்துக்கு வழிகாட்டி வளர்த்தது என எல்லோராலும் பாராட்டப்படும். இங்கு புதுமைப்பித்தனே சிறுகதையின் முன்னோடியாக, முதல்வராகக் கூறப்படுவார். கலாநிதி க.கைலாசபதியின் வார்த்தைகளில் கூறுவதாயின், புதுமைப்பித்தன் சமூக வாழ்வை அப்படியே படம் பிடித்துக்காட்டும் ‘இயற்பண்புவாத’த்தை வெளிப்படுத்தியவர்.

அடுத்த கட்டமாக சரஸ்வதி, சாந்தி ஆகிய சிற்றிதழ்களை எடுத்துக்கொண்டால், இவ்விதழ்கள் கலை இலக்கியத்தின் வடிவத்தை மட்டுமல்ல, அவற்றின் உட்பொருளான சமூகப் பணியின் தேவையையும் முன்னிலைப்படுத்திக் காட்டின. இங்கேதான் விஜய பாஸ்கரன், சிதம்பர ரகுநாதன் ஆகியோர் உயர்ந்து நிற்கின்றனர்.

விஜய பாஸ்கரன் தமிழ் சிறுகதையின் வளர்ச்சிக்கும் வளத்திற்கும் மட்டும் வழிகாட்டியாக நின்றுவிடவில்லை. வல்லிக்கண்ணன் ‘சரஸ்வதி களஞ்சியம்’ நூலுக்கு முன்னுரை எழுதியபோது, ‘சரஸ்வதி’யின் பல சாதனைகளைக் குறிப்பிடுகின்றார். அவை ‘மணிக்கொடி’யை விஞ்சி நிற்பதைத் தரிசிக்கலாம்.

விஜய பாஸ்கரன் கட்டுரை இலக்கிய வளர்ச்சிக்குப் பெரும்பங்கு ஆற்றினார். பழந்தமிழ் இலக்கிய விளக்கங்கள், புதுமை இலக்கயக் கட்டுரைகள், இந்திய தத்துவங்கள், உலக இலக்கிய அறிமுகங்கள், அறிவியல், பயணக் கட்டுரைகள், இலக்கிய விமர்சனக் கட்டுரைகள் என வெளியிட்டு தமிழ் இலக்கிய உலகிற்கு அவற்றை அறிமுகப்படுத்தினார்.

மற்றும் ஒரு தனிச்சிறப்பு, இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களின் சிறந்த படைப்புகளை வெளியிட்டு, தமிழ் நாட்டிற்கு பல எழுத்தாளர்களை அறிமுகப்படுத்தினார். கைலாசபதி, சிவத்தம்பி, டானியல், டொமினிக் ஜீவா, முத்துலிங்கம், எஸ்.பொ ஆகியவர்களது எழுத்துக்கள் ‘சரஸ்வதி’ மூலம் அரங்கேறின.

விஜய பாஸ்கரன் கோவை தாராபுரத்தில் காங்கிரஸ் சூழலில் பிறந்து வளர்ந்த போதிலும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் கம்யூனிஸ்ட் மாணவர் இயக்கத்தில் இணைந்து போராட்டங்களில் பங்காற்றி, வெளியேற்றப்பட்ட அனுபவத்துடனேயே பத்திரிகை உலகில் நுழைந்தார்.

இலட்சிய நோக்குடன் முற்போக்கு இலக்கியத்தை வளர்ப்பதிலுள்ள சிரமங்கள், நெருக்கடிகளைத் தெரிந்து கொண்டே ‘சரஸ்வதி’ இதழை விஜய பாஸ்கரன் தொடங்கினார். ஆரம்பத்தில் இலக்கியம் சார்ந்தவரின் ஆதரவுடன் விற்பனையில் முன்னேற்றம் கண்டார். ஆயினும் ஏழு ஆண்டுகளின் பின்னர், பல்வேறு காரணங்களால் சஞ்சிகையைத் தொடர்ந்து வெளியிட முடியாத சூழல் ஏற்பட்டது கவலைக்குரியதே.

சிற்றிதழ்கள் வெளியீடு, விநியோகம், விற்பனை ஆகியவற்றைப் போதிய மூலதனம் மற்றும் விளம்பர வருமானம் இன்றி தனிநபர் நடாத்தி வெற்றிபெறுவது அத்தனை எளிதல்ல. கொழும்பில் ‘குமரன்’ என்ற சிற்றிதழைப் பல்வேறு நெருக்கடிகளுடன் வெளியிட்டு, இடைநிறுத்த வேண்டி நேர்ந்த அனுபவம் எனக்குண்டு. ஆயினும் முற்போக்கான எழுத்தாளர், கவிஞர்களை கலை இலக்கிய உலகில் கொண்டுவர ‘குமரன்’ இதழ் முயன்றது மட்டுமே வெற்றியின் ஓர் அம்சமாகும்.

ஒரு சிலர் காலப்போக்கில் திசை திரும்பிய போதும், சிறந்த பல தமிழ் எழுத்தாளர்களை அறிமுகப்படுத்திய பெருமை விஜய பாஸ்கரனுக்கு உண்டு. ஜெயகாந்தன், கிருஸ்ணன் நம்பி, சுந்தர ராமசாமி, கபில ஸ்வெலபில் ஆகியோரை முதன் முதலில் அறிமுகப்படுத்தியது ‘சரஸ்வதி’ சஞ்சிகையே. மற்றும் பல எழுத்தாளர்களை விஜய பாஸ்கரன் அறிமுகப்படுத்தியதோடு, புதிய பல படைப்பாளிகளைத் தொடர்ந்து எழுதவும் தூண்டினார். அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் ஆர்.கே.கண்ணன், தி.ஜ.ர, க.நா.சு, வானமாமலை, சி.சு.செல்லப்பா, வையாபுரிப்பிள்ளை, சாமி சிதம்பரனார், மஹாகவி, முருகையன் ஆகியோராவார்கள்.

‘சரஸ்வதி களஞ்சியம்’ என்ற தொகுப்பு நூல் விஜய பாஸ்கரனது ஏழாண்டு கால உழைப்பை என்றும் அறைகூவி நிற்கும். இளைய சமுதாய எழுத்தாளர்கள், இலக்கிய ஆர்வலர்களுக்கு ‘சரஸ்வதி காலம்’ என்ற இலக்கிய வரலாற்றுக் காலகட்டத்தை அது என்றும் அறிமுகப்படுத்தும்.

நன்றி: தீக்கதிர்

*

# எண்ணெய் வளமே ஈரானின் பிரதான வருவாய்!

**தீப்பொறி**

ஈரான் மீது அமெரிக்காவும், 27 நாடுகள் அங்கம் வகிக்கும் ஐரோப்பிய யூனியன் அமைப்பிலுள்ள அதன் நேச நாடுகள் சிலவும் மேற்கொண்டு வரும் பொருளாதாரத் தடை மற்றும் விரோத நடவடிக்கைகள் காரணமாக, சில நாடுகளுக்கு தனது எண்ணெய் ஏற்றுமதியை நிறுத்தியுள்ளதாக அந்நாட்டின் பெற்றோலிய வளத்துறை அமைச்சர் றொஸ்ராம் குவாஸ்செமி அறிவித்துள்ளார். அவற்றுள் பிரிட்டன், பிரான்ஸ் என்பவை முக்கியமானவையாகும். அதேவேளை வேறு சில ஐரோப்பிய நாடுகளுடன் மூன்று முதல் ஐந்து வரையிலான ஆண்டுகளுக்கு எண்ணெய் ஏற்றுமதி செய்யும் ஒப்பந்தங்களை செய்துள்ளதாகவும் ஈரான் அறிவித்துள்ளது.

ஈரான் ஒரு நாளைக்கு 3.5 மில்லியன் பரல்கள் எண்ணெயை உற்பத்தி செய்கிறது. அதில் 2.5 மில்லியன் பரல்களை ஏற்றுமதி செய்கிறது. அதில் 70 வீதம் ஆசியாவுக்கு ஏற்றுமதியாகின்றது. 18 சதவீதம் ஐரோப்பிய யூனியன் நாடுகளுக்குச் செல்கின்றது. ஆனால் பிரிட்டனும் ஜேர்மனியும் அதில் 1 வீதமும், பிரான்ஸ் 3 வீதமும் மட்டுமே பெறுகின்றன. கிரீஸ் தனது எண்ணெய் தேவையில் மூன்றிலொரு பங்கை ஈரானிடமிருந்து பெறுகின்றது. ஈரான் தனது அந்நிய செலாவணித் தேவைகளுக்கு எண்ணெய் ஏற்றுமதியிலேயே தங்கியிருக்கின்றது. அதன் தேசிய வரவுசெலவுத் திட்டத்தின் 50 வீதத்தை எண்ணெய் ஏற்றுமதி வருமானமே ஈடுசெய்கின்றது.

ஈரான் அணுக்குண்டுகளைத் தயாரிக்கும் ஆற்றலை அண்மித்துவிட்டதாகவும், அதனால் அதன் பிரதான எதிரி நாடான இஸ்ரேலுக்கும், அதன் மேற்கத்தையக் கூடாளிகளுக்கும் ஆபத்து எனக்கூறி, ஈரான் மீது பொருளாதாரத் தடை உட்பட பல்வேறு தடைகளை மேற்கு நாடுகள் விதித்துள்ளன. இஸ்ரேல் ஈரானின் அணுசக்தி நிலைகள் மீது அதிரடியாகக் குண்டுத் தாக்குதல்களை நடாத்தவும் திட்டமிட்டு வருகின்றது. ஆனால் அதன் அணு ஆராய்ச்சி நிலையங்கள் மிகவும் பாதுகாப்பான மலைப்பிராந்தியத்தில் அமைந்துள்ளதால், அவற்றை இலேசில் தாக்கிவிட முடியாது எனவும் கூறப்படுகிறது. இருப்பினும் அண்மைக்காலங்களில் ஈரானின் பல திறமைவாய்ந்த அணு விஞ்ஞானிகள் கொல்லப்பட்டதின் பின்னணியில் இஸ்ரேலின் 'மொஸாட்' உளவு அமைப்பே செயற்பட்டதாகச் சந்தேகிக்கப்படுகிறது.

எந்தவொரு அணுசக்தி தயாரிப்பு நடவடிக்கைகளிலும் ஈரான் ஈடுபடக்கூடாது என சர்வதேச அணுசக்திக் கமிசன் வலியுறுத்தி வருகின்றது. ஆனால் ஈரானோ தான் அணுசக்தியை அழிவு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தவில்லை எனவும், ஆக்கபூர்வமான முயற்சிகளுக்கே அதைப் பயன்படுத்துவதாகவும் திரும்பத் திரும்பக் கூறிவருகின்றது. ஈரானின் இந்த உறுதிமொழியை அமெரிக்க தலைமையிலான மேற்குலக நாடுகள் ஏற்க மறுத்து வருகின்றன. ஈராக் மீது படையெடுப்பதற்கு முன்னரும், அந்நாட்டிடம் அழிவுகரமான ஆயுதங்கள் இருப்பதாகக் காரணம் காட்டியே அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் அந்நாட்டை ஆக்கிரமிப்புச் செய்தன. ஆனால் இறுதியில் அப்படியான ஆயுதங்கள் அந்நாட்டிடம் இருக்கவில்லை என்பது நிரூபணமாகியது.

ஈரானின் விவகாரம் என்ன 'கண்டு பிடிப்புடன்' இறுதியில் முடிவடையும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

*

## தோசை

ஆண்டாண்டு காலமாக அளவு மாறாதது
தோசைகளின் விட்டம்.
விளிம்பு தாண்டாதது அவற்றின் வட்டம்
உலோகக் கடின அடித்தளத்தில்
ஊற்றப்பட்டாலும் அவை
ஒருபோதும் இழப்பதில்லை மென்மையை.
விரிவும் திருப்பமுமற்ற
வெற்றுச் சுழற்சி.

எதனோடும் இணைந்து போகும் சுயமின்மை.
இழப்பின் விழிப்பற்று
மூடிக்குள் புகுந்து வேகும்.
உள்ளே வெந்தாலும்
வெளிக் காட்டாத புன்முறுவல் மேலே.

சுருட்டித் திருப்புகையில்
சோர்ந்த முனகலன்றி
வேறெதுவும் சொல்லாதவை.
நகர்த்தவில்லை அவற்றை,
நவீன வகைப்படுத்தல்கள்
நிஜமான சுதந்திரத்துள்.
வருடங்களால் வளர்ச்சியுறாது,
வடிவம் மாறாது தோசைகள்
வாழும் வாழ்தலற்று.

அம்மாவின் பாட்டியின்
பாட்டியின் அம்மாவின்
இன்னும் என்னுடைய தோசைகள்
ஆண்டாண்டு காலமாய் அப்படியே.

**– உமா மகேஸ்வரி**

# இனப்பிரச்சினைத் தீர்வுகளை குழப்பிய ஐ.தே.கவுக்கு தொடர்ச்சியாக உதவிய தமிழ் தலைமைகள்!

தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு என வெவ்வேறு பெயர்களில் செயற்பட்ட போதிலும், ஆறு தசாப்தங்களுக்கு மேலாக ஒரே தலைமைப் பாரம்பரியமே தொடர்கின்றது. இக்காலப்பகுதியில் இத்தலைமை அதன் பகிரங்க அரசியல் செயற்பாட்டில் இனப்பிரச்சினையைத் தவிர வேறு எந்தப் பிரச்சினையையும் உள்ளடக்கவில்லை. அரசியலில் அறுபது வருடங்கள் சாதாரண காலப்பகுதி அல்ல.



சிவா சுப்பிரமணியம்

இனப்பிரச்சினை தொடர்பாக கருத்தீடுபாட்டுடனும் தீர்க்கதரிசனத்துடனும் செயற்பட்டிருந்தால், இக்காலப்பகுதியில் சிறிதளவாவது முன்னேற்றத்தை அடைந்திருக்க முடியும். ஆனால் தமிழ் மக்கள் பின்னடைவுகளையே தொடர்ச்சியாகச் சந்தித்திருக்கிறார்கள். இழப்புகளும் அழிவுகளுமே அவர்கள் கண்ட பலன். இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வில் அக்கறை உள்ள ஒவ்வொருவரும் இதற்கான காரணம் என்னவென்று நிதானமாக சிந்திக்க வேண்டிய காலம் வந்துவிட்டது.

சமகால யதார்த்தத்தை விளங்கிச் செயற்படுவதும், கிடைக்கும் சந்தர்ப்பங்களைச் சாதகமாகப் பயன்படுத்துவதும், நட்பு சக்திகளை இனங்காண்பதும், அரசியல் செயற்பாடுகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு அத்தியாவசியமானவை. தமிழ் மக்களின் அரசியல் தலைமையைத் தொடர்ச்சியாகத் தங்களிடம் வைத்திருப்பதில் தமிழ்த் தலைவர்கள் அக்கறை செலுத்தினார்களேயொழிய, மேலே கூறிய விடயங்களில் கவனம் செலுத்தவில்லை.

சிங்கள மக்கள் மத்தியிலும் ஆதரவுத் தளமொன்றை உருவாக்குவதின் மூலமே, இனப்பிரச்சினைக்கான தீர்வு நிரந்தரமானதாக நிலைக்க முடியும். தமிழ்த் தலைவர்கள் இதைப் புரிந்துகொண்டு செயற்படவில்லை. சிங்கள விரோத உணர்வைத் தமிழ் மக்களிடம் தோற்றுவிக்கும் வகையிலேயே இவர்களின் அரசியல் செயற்பாடுகள் அமைந்திருந்தன. தமிழ் மக்களின் போராட்டம் சிங்கள மக்களுக்கு எதிரானது என்ற உணர்வு அம்மக்களிடம் தோன்றுவதற்கு இது இடமளித்தது.

கிடைத்த சந்தர்ப்பங்களைச் சாதகமான முறையில் பயன்படுத்தியிருந்தால், இன்று தமிழ் மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் அவல நிலையைத் தவிர்த்திருக்க முடியும். பண்டா - செல்வா ஒப்பந்தம், வடக்கு - கிழக்கு மாகாணசபை, சந்திரிகாவின் அதிகாரப் பகிர்வுத் திட்டம் என்பன விசேடமாகக் குறிப்பிடப்பட வேண்டியவை. இவை தொடர்பாகத் தமிழ்த் தலைமை நடந்துகொண்ட முறை ஐக்கிய தேசியக் கட்சிக்கு நேரடியாக நன்மை பயப்பதாக இருந்ததையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

பண்டா - செல்வா ஒப்பந்தம் சமஸ்டி ஆட்சியமைப்புக்கான அடிப்படையை உருவாக்குகின்றது என்று எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அப்போது கூறினார். ஆனால் அந்த ஒப்பந்தத்துக்கு அச்சுறுத்தல் ஏற்பட்ட நேரத்தில் அதைப் பலவீனப்படுத்தும் வகையிலேயே அவரது கட்சி செயற்பட்டது. தென்னிலங்கையில் ஐக்கிய தேசியக் கட்சி ஒப்பந்தத்துக்கு எதிராக மோசமான இனவாதப் பிரச்சாரத்தை மேற்கொண்டது. ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்தால் நாடு பிளவுபட்டுவிடும் என்றும், வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் சிங்களவர்கள் தமிழ் படிக்க நேரும் என்றும், அம்மாகாணங்களில் சிங்களவர்களைக் குடியேற்ற முடியாது போய்விடும் என்றும், சிங்கள மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்ததோடு, பௌத்த குருமாரையும் இப்பிரச்சாரத்தில் இணைத்துக் கொண்டது. ஒப்பந்தத்துக்கு எதிராக ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் தலைமையில் கண்டி யாத்திரையும் சென்றார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரச்சாரத்துக்கும், அரசாங்கத்திலுள்ள வலதுசாரி அமைச்சர்களின் எதிர்ப்புக்கும் மத்தியில் பிரதமர் பண்டாரநாயக்க ஒப்பந்தத்தை ஆதரித்து நின்றார். இந்த நிலையில், பிரதமரைப் பலவீனப்படுத்த வேண்டும் என்ற ஒரே நோக்கத்துக்காக, வலதுசாரி அமைச்சர்கள் குழு மேற்கொண்ட தீர்மானத்தின் அடிப்படையில், வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு மீண்டும் சிங்கள சிறீ பஸ்கள் அனுப்பப்பட்டன. வலதுசாரி அமைச்சர்களின் நோக்கத்தை விளங்கிக்கொண்டு, பிரதமரின் கரங்களைப் பலப்படுத்தி, ஒப்பந்தத்தை நடைமுறைக்குக் கொண்டு வரும் வகையில் தமிழரசுக்கட்சி செயற்பட்டிருக்க வேண்டும். ஆனால், தமிழரசுக்கட்சி சிறீ எதிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்துப் பிரதமரைப் பலவீனப்படுத்தியது. அரசியல்வாதி என்ற

*வகையில் ஒப்பந்தத்தை ரத்துச் செய்வதைத் தவிர வேறு வழி பிரதமருக்கு இருக்கவில்லை. ஒப்பந்தம் நடைமுறைக்கு வருவதை எப்படியாவது தடுக்க வேண்டும் என்ற, ஐக்கிய தேசியக் கட்சியின் எண்ணம் ஈடேறுவதற்குத் தமிழரசுக்கட்சியும் கைகொடுத்தது.*

*வடக்கு - கிழக்கு மாகாணசபையை செயற்பட முடியாத நிலையைப் புலிகளும் பிரேமதாசவும் இணைந்து உருவாக்கியபோது, தமிழர் விடுதலைக் கூட்டணி அதற்கு எதிராக எந்தவொரு நகர்வும் மேற்கொள்ளாததின் மூலம், ஐக்கிய தேசியக் கட்சியின் முடிவுக்கு மௌன ஆதரவு அளித்தது.*

*சந்திரிகாவின் அரசாங்கம் முன்வைத்த அதிகாரப் பகிர்வுத் தீர்வுத் திட்டம் பல சிறப்பான அம்சங்களைக் கொண்டிருந்தது. அது சமஸ்டி ஆட்சியமைப்புக்கு மிக அண்மையான தீர்வுத் திட்டம். அத்தீர்வுத் திட்டத்தின் பிராந்திய சபைகளுக்கான அதிகாரங்களையோ, விடயங்களையோ, எல்லைகளையோ சம்பந்தப்பட்ட சபையின் அல்லது சபைகளின் சம்மதமின்றி எவ்விதத்திலும் மாற்ற முடியாது. இது ஒரு சிறப்பான பாதுகாப்பு ஏற்பாடு. இந்தத் தீர்வுத் திட்டம் உரிய முறையில் பாராளுமன்றத்தில் நிறைவேறவிடாது தடுப்பது ஐக்கிய தேசியக் கட்சியின் அன்றைய பிரதான நிகழ்ச்சி நிரலாக இருந்தது. தீர்வுத் திட்டத்தை எதிர்த்ததின் மூலம், தமிழ்த் தலைவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் நோக்கம் நிறைவேறுவதற்குக் கைகொடுக்கும் வகையில் செயற்பட்டார்கள்.*

*அன்று இத்தீர்வுத் திட்டத்தை ஒட்டுமொத்தமாக நிராகரித்துவிட்டு, சந்திரிகா அரசாங்க காலத்தில் தீர்வுக்காக சமர்ப்பித்த பிரேரணைகள் இனப்பிரச்சினைக்கான தீர்வில் எடுகோள்களாக இருக்கலாம் என்று இப்போது கூட்டமைப்பினர் கூறுவது வேடிக்கையாக இருக்கின்றது.*

***(இக்கட்டுரையாளர் 'தினகரன்' நாளிதழின் முன்னாள் பிரதம ஆசிரியராவார். இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றம் மாதாமாதம் வெளியிடும் 'சிந்தனை' வெளியீடுகளின் வரிசையில், சிவா சுப்பிரமணியம் எழுதிய 'தமிழ் மக்களின் விமோசனத்துக்கு புதிய பாதை' என்ற சிறு வெளியீட்டின் முக்கியமான சில பகுதிகள் மேலே தரப்பட்டுள்ளன)***

## சுவைக்கவும் ரசிக்கவும்!

இதுவரை 13 வழக்குகளில் விடுபட்டுவிட்ட ஜெயலலிதாவுக்கு சிக்கல் 14வது வழக்கான சொத்துக் குவிப்பில் வந்தது. 14வது ஆண்டில் வந்தும் இருக்கிறது.

10 ஆயிரம் சேலைகள், பல நூறு வாட்சுகள், செருப்புகள், வெள்ளிப் பாத்திரங்கள், நகைக் கூடங்கள்…அசையும் மற்றும் அசையாச் சொத்துகளின் மதிப்பை லஞ்ச ஒழிப்பு போலிஸ் அதிகாரி நல்லம நாயுடு 66 கோடி என்று மதிப்பிட்டார். சிறை வைக்கப்பட்ட ஜெயலலிதாவிடம் விசாரணை செய்தவரும் அவர்தான்.

'தங்க நகைகள், வெள்ளிச் சாமான்கள் எப்படிக் கிடைத்தன?' என்று நல்லம் நாயுடு கேட்க…:கொஞ்ச நகைகள் மைசூர் மகாராஜா என் தாத்தாவுக்கக் கொடுத்தது. பிறகு, எம்.ஜி.ஆர் எனக்குக் கொடுத்தார். எனக்குப் பிறந்த நாள் அன்பளிப்பாகக் கட்சித் தொண்டர்கள் கொடுத்தார்கள்' என்று ஜெயலலிதா சொன்னதாகச் சொல்வார்கள்.

சென்னை மத்திய சிறைக்குள் வைத்து 14 ஆண்டுகளுக்கு முன்னால் நடந்த அதே கேள்வி – பதில் வைபோகம் கடந்த வாரம் கர்நாடக மாநிலம் பரப்பனஹள்ளி அக்ரஹாரா சிறை வளாகத்தில் உள்ள சிறப்பு நீதிமன்றத்தில் நடந்தது.

- ப.திருமாவேலன் 'ஆனந்த விகட'னில் எழுதிய ஒரு கட்டுரையில் *

## அணுப்பேரழிவு தடுக்கப்பட்டது எப்படி?

∴பூகுஷீமாவில் உள்ள டாயிச்சி அணுமின் நிலையம் 6 அணு உலைகள் கொண்டது. 'டோக்யோ மின்சக்தி கம்பெனி' (டெப்கோ) என்ற நிறுவனத்துக்குச் சொந்தமான இந்த உலைகளை அந்நிறுவனம்தான் இயக்கி வருகிறது. மார்ச் 11, 2011 அன்று அகண்ட கிழக்கு ஜப்பானில் பெரும் நிலநடுக்கம் ஏற்பட்டபோது முதல் மூன்று உலைகள் (1 – 3 பிரிவுகள்) இயங்கிக் கொண்டு இருந்தன் மற்ற மூன்று உலைகள் (4 – 6 பிரிவுகள்) பராமரிப்பிற்காக நிறுத்தப்பட்டிருந்தன. முதல் மூன்று உலைகள் நிலநடுக்கத்தாலும், சுனாமியாலும் மின்சக்தியை இழந்ததால் அவ்வுலைகளைக் குளிர்விக்கும் அமைப்புகள் செயலிழந்தன. அதனால் அணு உலைகளின் வெப்பம் அளவு மீறி உயர்ந்து, உலைகளின் உள்ளே இருந்த அணு எரிபொருள் உருக ஆரம்பித்தது. அப்படி உருகினால், பேரளவுக்கு அணுக் கருப்பிளவு துவங்கி, கட்டு மீறித் தொடர்வினைகள் ஏற்படும் சாத்தியம் இருந்தது. அதனால் ஏற்படக்கூடிய அபாயகரமான கதிர்வீச்சைத் தடுக்க, ஜப்பானின் தற்காப்புப் படைகள், டெப்கோ ஊழியர்கள், தீயணைப்புப்படையினர் எல்லாரும் தடுப்புக் கலங்களுக்குள்ளும், அணு உலைக் கலங்களுள்ளும் அடித்துப் பிடித்துக்கொண்டு நீரைப் பாய்ச்சினர். அப்போது சில ஹைட்ரஜென் வெடிப்புகள் நிகழ்ந்தபோதிலும் ஏப்ரல் மாத நடுப்பகுதியில், அணு உலை எரிபொருள் உருக்கம் தொடர்ந்து நிகழாதபடி அவர்களால் தடுக்க முடிந்தது.

**– ஹவாயீ பல்கலைக் கழக சமூகவியல் பேராசிரியர் ஹிரோ சாய்தோ**

# உலகப் புகழ்பெற்ற திரைப்பட மேதை சத்யஜித் ரேயை கிண்டல் செய்த சிவாஜியும் எம்ஜியாரும்!


சத்யஜித் ரே

தமிழர்களிடம் காணக் கிடைக்கும் ஒரு விநோதமான பழக்கம் என்னவென்றால், உலகத்திலேயே சிறந்த மொழி, சிறந்த கலாச்சாரம், சிறந்த இலக்கியம் – இன்னும் என்னென்ன சிறந்த விசயங்கள் உண்டோ அத்தனை சிறந்தவைகளுக்கும் தாங்களே சொந்தக்காரர்கள் என்று நம்புவது. சமயங்களில் சில கவிஞர்களும் நம்பிக்கைக்கு உரம் போட்டு வளர்ப்பதுண்டு.

கவிஞர்கள் உணர்ச்சி வசப்படக்கூடியவர்கள் என்றோ, இதே கவிஞர் சீனாவில் பிறந்திருந்தால் 'இந்த உலகத்திலேயே இனிமையான மொழி சீன மொழிதான்' என்று சத்தியம் செய்யக்கூடியவர் என்றோ நினைத்துப் பார்க்கும் அளவுக்குத் தமிழர்கள் தர்க்கரீதியாகச் சிந்திக்கக்கூடியவர்கள் அல்ல.

உலகில் எந்தப் பகுதியிலும் அறிஞர், நாவலர், கலைஞர், புரட்சித்தலைவர், புரட்சித் தலைவி, புரட்சிக்கலைஞர், நடிகர் திலகம், கவிப்பேரரசு போன்ற பட்டங்களை நாம் காண இயலாது. காவியங்களில் காணக்கூடிய அளவுக்கு சாகசத்தன்மைகளைக் கொண்டிருந்த மாபெரும் புரட்சிக்காரனாகவும், இன்றைக்கும் உலகிலுள்ள புரட்சி இயக்கங்களுக்கு நம்பிக்கை அளிக்கக்கூடியவனாகவும் விளங்கும் சே குவேராவையே யாரும் புரட்சித்தலைவன் என்று அழைத்தது கிடையாது. ஆனால் தமிழ்நாட்டில் சினிமாவில் திறமையாக ஸ்டண்ட் செய்பவர்கள்தான் புரட்சிக்காரர்கள்.

தமிழ்நாட்டில் உருவாகும் எந்த ஒரு பிரபலமான நபரும் இந்த இமேஜ் என்ற பொறியில் சிக்கிக்கொள்ளாமல் இருந்ததில்லை. சினிமாவை எடுத்துக்கொண்டால், சிவாஜியை (எம்ஜியார் அரசியலுக்குள் போய்விட்டதால் அவரை விட்டுவிடுவோம்) தமிழ்நாடே நடிகர் திலகம் என்று கொண்டாடியது. ஆனால் அவருடைய பெயர் தமிழ்நாட்டு எல்லையை விட்டு வெளியே தெரியவில்லை. உண்மையிலேயே உலகின் தலைசிறந்த எந்தவொரு நடிகனோடும் ஒப்பிடும் அளவுக்கு நடிப்புத் திறமை கொண்ட கணேசன் தன்னுடைய வாழ்நாள் முழுவதுமே தரத்தில் மிகத்தாழ்ந்த வர்த்தக சினிமாவிலேயே தொடர்ந்து நடித்ததின் காரணமாக இன்று சாதாரண ஆட்களால் கூடப் பகடி செய்யப்படும் அளவுக்கு கேலிப்பொருள் ஆகிவிட்டார். தனது கடைசி காலத்தில் அவர் நடித்த முதல் மரியாதை என்ற படம் மட்டுமே அவருக்கு நற்பெயரை ஈட்டித் தந்தது என்றால் அது அவரது நீண்டகால சினிமா அனுபவத்துக்கு எவ்வளவு பெரிய நஸ்டம்!

காரணம், உலகின் மிகச்சிறந்த நடிகர்களுள் ஒருவராக விளங்கினாலும் சிவாஜிக்கு உலகின் தரமான சினிமா பற்றி எதுவும் தெரிந்திருக்கவில்லை. தெரிந்திருக்காதது மட்டுமல்ல, சினிமா மேதைகளுள் ஒருவராக உலகமே கொண்டாடும் சத்யஜித் ரேயை சிவாஜியும், எம்ஜியாரும், ராஜ் கபூரும் கிண்டலும் கேலியும் செய்தார்கள் என்பது வரலாறு.

சிவாஜியை அடிக்கடி பலரும் மார்லன் ப்ராண்டோவோடு ஒப்பிடுவதைப் பார்க்கிறோம். ஆனால் மார்லன் ப்ராண்டோ The Street Car Named desire (1951), Julies Ceasar (1953), On the Waterfront (1954) போன்ற உலகப் புகழ்பெற்ற படங்களைத் தந்துகொண்டிருந்த போது சிவாஜி எதிர்பாராதது, கூண்டுக்கிளி, தூக்குத்தூக்கி, மனோகரா போன்ற வர்த்தக சினிமாவில் நடித்துக்கொண்டிருந்தார்…. மனோகரா வெளியான ஆண்டு 1954. இதற்கு அடுத்த ஆண்டு வெளியான சத்யஜித் ரேயின் பதேர் பாஞ்சாலி உலக சினிமாவின் காவியங்களில் ஒன்றாக இன்றளவும் கொண்டாடப்படுகிறது. உலகம் முழுவதும் உள்ள திரைப்படக் கல்லூரிகளில் பாடமாக வைக்கப்பட்டுள்ளது.

**(தமிழக எழுத்தாளர் சாருநிவேதிதாவின் கட்டுரைத் தொகுதியான 'நரகத்திலிருந்து ஒரு குரல்' என்ற சினிமா சம்பந்தமான நூலில் இடம் பெற்றுள்ள ஒரு கட்டுரையின் ஒரு பகுதியே இது. அவருக்கு எமது நன்றி)**

*

**மனிதன் தனிமனிதனாக அல்லாமல், அவன் சார்ந்திருக்கக்கூடிய வர்க்கத்தில் ஒருவனாகச் செயல்படுகின்றான்; ஆனால் அதை அவன் உணர்வது கிடையாது. – மார்க்ஸ்**

# இப்படியும் நடந்தது!

கணிதப் பேராசிரியர் சி.சுந்தரலிங்கம் 1965 வரை வவுனியா தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவர். அந்தக் காலங்களில் ஐ.தே.க அரசுகளின் ஆலோசகர் போலவும் செயற்பட்டவர். 1958 இனக்கலவர காலத்தில் வவுனியா தமிழ் கிராமங்களில் சிங்களவர்களின் ஊடுருவலைத் தடுப்பதற்கு தமிழர்கள் ஆயுதம் ஏந்த வேண்டும் எனப் பகிரங்கமாக வலியுறுத்தியவர். அதற்காக 'அடங்காத் தமிழர் முன்னணி' என்ற ஒரு அமைப்பையும் உருவாக்கினார்.

1965 பொதுத்தேர்தலில் சுந்தரலிங்கத்தை தமிழ் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளரான தா.சிவசிதம்பரம் தோற்கடித்து வெற்றிவாகை சூடினார். தமிழ் காங்கிரஸ் கட்சியில் இரண்டு சிவசிதம்பரங்கள் இருந்ததால், உடுப்பிட்டி எம்.பியாகவிருந்த மு.சிவசிதம்பரத்தை 'உடுப்பிட்டி சிங்கம்' என்றும், தா.சிவசிதம்பரத்தை 'வவுனியா நாம்பன்' என்றும், தமிழ் காங்கிரஸ் தலைவர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் பெருமையாக அழைப்பதுண்டு.

தா.சிவசிதம்பரம் 1965 தேர்தலில் சி.சுந்தரலிங்கத்தை தோற்கடித்தது ஒரு சுவாரசியமான வரலாறு. அங்கு நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டமொன்றில் உரையாற்றிய சுந்தரலிங்கம், 'வன்னியான்கள் வைக்கல் கத்தையைக் கண்ட மாடு போல, சாராயப் போத்திலைக் கண்டால், அந்தப் பக்கம் ஓடிவிடுவான்கள்' எனத் திமிர்த்தனமாகக் கூறினார். இதையே பிரச்சார ஆயுதமாக்கிய சிவசிதம்பரம், 'யாழ்ப்பாணத்தானான சுந்தரலிங்கம், வன்னி மக்களைப் பார்த்து மாடுகள் எனக் கேலி செய்கிறார்' எனக் கூட்டத்துக்குக் கூட்டம் பேசி, வன்னி மக்களின் உணர்வுகளைக் கிளறி, வெகு சுலபமாக சுந்தரலிங்கத்தைத் தோற்கடித்துவிட்டார். 'எலிசபெத் மகாராணிக்கு கணக்குப் படிப்பித்த' மேதை சுந்தரலிங்கம், 'வன்னியான்' சிவசிதம்பரத்தின் பிரச்சாரத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் அவமானகரமாகத் தோற்றுப்போனார்.

அந்தக் காலகட்டத்தில் தா.சிவசிதம்பரம் யாழ்ப்பாணத்தவர்களுக்கு எதிராகத் தீவிர பிரச்சாரம் செய்து வந்ததுடன், வவுனியா பஸ் நிலையத்தில் கடையொன்றை வாடகைக்கு எடுத்து, அதன் முகப்பில் யாழ்ப்பாணத்தவர்களுக்கு எதிராக 'யாழகற்றுச் சங்கம்' என்ற பெயர்ப்பலகையையும் பகிரங்கமாக மாட்டி வைத்திருந்தவர்.

தேர்தலில் தோற்ற சுந்தரலிங்கம் வவுனியாவிலிருந்த பெரும் தொகையான நிலபுலன்களையும், பங்களா போன்ற வீட்டையும் தற்காலிகமாகக் காலிசெய்துகொண்டு, கீரிமலையிலிருந்த இன்னொரு பங்களா போன்ற தனது வீட்டில் குடியேறினார். அங்கு குடியேறியதின் பிரதான நோக்கம், அந்தக் காலகட்டத்தில் வடபகுதியெங்கும் சூறாவளியாக வீசிய தீண்டாமைக்கு எதிரான போராட்டத்தில் முக்கிய அம்சமாக இடம் பெற்றிருந்த, மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலில் நடைபெற்று வந்த தாழ்த்தப்பட்ட மக்களின் ஆலயப் பிரவேச முயற்சிக்கு எதிரான சாதி வெறியர்களின் சண்டித்தனத்துக்கு தலைமை தாங்கவே.

மாவிட்டபுர ஆலயப் பிரவேசப் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களைத் தாக்குவதற்காக, சுந்தரலிங்கம் ஏராளமான அடியாட்களைத் திரட்டியதுடன், திரிக்கைவால், வேளா முள்ளு உட்பட பல ஆயுதங்களையும் கோவிலுக்குள் கொண்டுபோய் வைத்திருந்தார். யாழ்ப்பாண நீதிமன்றத்தில் ஆலயப்பிரவேசக்காரர்களுக்கு ஆதரவாக தீர்ப்பு வழங்கப்பட்ட போது, லண்டனிலிருந்த பிரிவுகவுன்சில் வரை மேன்முறையீடு செய்து தாழ்த்தப்பட்ட மக்களுக்கெதிராக வாதிட்டார். எனினும் இறுதியில் தோல்வியையே தழுவினார். சுந்தரலிங்கத்தின் இந்த அடாவடித்தனத்துக்கு அன்று ஆட்சியிலிருந்த ஐ.தே.க அரசும், அதில் பங்காளிகளாகவிருந்த தமிழரசு – தமிழ் காங்கிரஸ் கட்சிகளும், சாதி வெறி பிடித்த தமிழ் பொலிசாரும் பக்கபலமாக இருந்தனர்.

1970களில் இனப்பிரச்சினை தீவிரமடைந்த போது, வல்வெட்டித்துறையில் ஓய்வுபெற்ற தபாலதிபர் ஞானமூர்த்தி வீட்டில் தமிழ் இனவாத சக்திகள் எல்லோரையும் சேர்த்து தமிழர் விடுதலைக் கூட்டணி உருவாக்கப்பட்ட போது. அதுவரையும் கீரிகளும் பாம்புகளுமாக இருந்த, சாதி வெறியும் பிரதேசவாதமும் கொண்டிருந்த தமிழரசு அமிர்தலிங்கமும், தமிழ் காங்கிரஸ் சிவசிதம்பரங்களும், சுயாட்சிக் கழக நவரத்தினமும், அடங்காத் தமிழன் சுந்தரலிங்கமும் ஒன்றாகச் சேர்ந்து கொண்டனர்.

இந்தத் தகிடுதத்த அரசியலை தமிழின ஒற்றுமை என்று சொல்வதா அல்லது வர்க்க ஒற்றுமை என்பதா?

*

---

**சூழல் மனிதனைப் பாதிக்கிறது என்பது உண்மையில் ஒரு பாதி மட்டுமே. இதன் இன்னுமொரு பாதி சூழலை மனிதன் பாதிக்கிறான் என்பதாகும்.**

**– மார்க்கஸ்**

# நடுநிலைமையும் ஊடகங்களும்

**- முமியா அபு – ஜமால்**



***முமியா அபு ஜமால் ஒரு சிறுவனுடன்***

பத்திரிகைத் துறையில் நடுநிலைமை என்பது ஒரு மாயை. உள்ளீடற்ற ஒரு சொல். இருப்பினும் பத்திரிகையியல் கல்லூரியில் சேர்ந்த முதல் நாளிலிருந்தே இந்தப் பொய்யினால் விசமாக்கப்பட்ட, இந்த தவறைத் தொடர்ந்து செய்து வருகின்ற ஆட்களைப் பொறுத்த வரையிலும், இந்த நடுநிலைமை என்பது உண்மையாகும். இந்தக் கருத்தை முடிந்த உண்மையாக அவர்கள் நம்பி வருவது மட்டுமல்ல, தங்களது தொழிலுக்கு இதையே அடித்தளமாகவும் வைத்துக் கொள்கிறார்கள். இது என்றென்றைக்கும் பெரும் இலட்சியமாகவே இருந்து வருகிறது. ஆனால் யதார்த்தத்தில் தவறாக வழிகாட்டப்பட்ட நம்பிக்கையாகத்தான் இருக்கிறது. தங்களுடைய ஒவ்வொரு செயலையும் நியாயப்படுத்த அவர்கள் இதைப் பயன்படுத்துகிறார்கள்.

இன்றைய செய்திகளை நீங்கள் பார்த்தீர்களானால் - நாடு தழுவிய அளவில் வெளியிடப்படும் செய்திகளைப் பற்றித்தான் பேசுகிறேன் - இதுவரையில் உள்ளூர் செய்திகளாக மட்டுமே இருந்து வந்தவையெல்லாம் அதிர்ச்சியளிக்கும் விதத்தில் இப்போது தேசிய அளவில் முக்கியத்துவம் வாய்ந்தவையாகக் கருதப்படுகின்றன. உள்ளூர் அளவிலான குற்றச் செய்திகள் - முக்கியமாக மிகக் குரூரமான செய்திகள் - தேசியச் செய்திகளாக மாறுகின்றன. அந்தச் செய்திகளில் ஏதோவோர் அசாதாரணமான அம்சம் இருக்கிறது என்ற அடிப்படையில் அல்ல: மாறாக, அது விலைபோகும் சரக்கு என்பதால்தான். இரத்தம் சிந்துவதைப் பற்றிய செய்தியாக இருந்தால் அது வரவேற்பைப் பெறும். இந்த நாட்டில் அறிவுபூர்வமான, சிந்தனையைக் கிளறுகின்ற, அதிகாரம், பதவி, அந்தஸ்து போன்ற அடிப்படை உறவுகள் பற்றி மக்களைப் பேச வைக்கின்ற அல்லது அவற்றின் மீது கேள்விகளை எழுப்பும்படி தூண்டுகின்ற செய்திகளை இவர்கள் நமக்கு காட்டுவதில்லை. பரபரப்பூட்டும் செய்திகளில்தான் இவர்கள் அக்கறை காட்டுகிறார்கள்.

முக்கிய செய்தியாக அல்லது அத்தகைய ஒரு நிகழ்ச்சிக்கு ஏற்ற விதமாகச் சாதாரண செய்திகள் சுருக்கப்பட்டு வடிவமைக்கப்படுகின்றன. இறுதியாகக் கிடைக்கும் பொருள் குப்பைதான். ஆனால் உணர்ச்சிரீதியாகவும், பரபரப்பூட்டும் வகையிலும் (சிந்திக்கும் வகையில் அல்ல) உங்களைக் கவரும் வண்ணம் அந்தக் குப்பை (செய்தி) மிகக் கவனமாக வடிவமைக்கப்படுகிறது. அடிப்படைகள் மீது கேள்வி எழுப்புமாறு அது உங்களை ஊக்கப்படுத்தாது: அல்லது தூண்டிவிடாது. அந்தச் சம்பவத்திற்குப் பின்னால் உள்ள உண்மையான பிரச்சினைகள் அடிக்கடி புறக்கணிக்கப்படுகின்றன. கேள்விகள் எழுப்ப வேண்டும் என்ற அளவிற்கு அவை முக்கியமானவையாகக் கருதப்படுவதில்லை.

பெருமுதலாளிகளின் காற்சட்டைப் பையில்தான் ஊடகங்கள் இருக்கின்றன என்பதை எழுபதுகளில் மக்கள் ஏற்றுக்கொள்ளத் தொடங்கிவிட்டார்கள். இன்று ஊடகமே பெரும் தொழிலாக மாறிவிட்டது. முக்கியமான ஊடக நிறுவனங்களைப் பெரும் தொழில் நிறுவனங்கள் கட்டுப்படுத்தி வருவது மட்டுமல்ல – அவற்றின் அங்கமாகவே அவை இருந்து வருகின்றன. பெரும்பாலான ஊடக நிறுவனங்கள் மாபெரும் பன்னாட்டு நிறுவனங்களுக்குச் சொந்தமானவை. காற்றின் ஊடாக வரும் செய்திகளை அவை கட்டுப்படுத்துவதில்லையென்று நீங்கள் நினைத்தால், உங்களுக்கு ஆச்சரியம்தான் காத்திருக்கும். உங்களுடைய ஊதியம் என்னுடைய கட்டுப்பாட்டில் இருந்தால், ஊடகங்களில் எதை நீங்கள் சொல்ல வேண்டும், சொல்லக்கூடாது என்பதை நான்தான் தீர்மானிப்பேன்.

**(முமியா அபு – ஜமால் ஒரு ஆபிரிக்க அமெரிக்கராவார். அமெரிக்காவில் ஒரு பிரபலமான சிறந்த அச்சு, ஒலி, ஒளி ஊடகவியலாளரான அவர், ஒரு கொலைக் குற்றச்சாட்டில் கடந்த 29 ஆண்டுகளாக மரண தண்டனைக் கைதியாக சிறையில் வாடுகின்றார். அவரை விடுவிக்கும்படி அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் உட்பட பல நாடுகளின் அரசுகள், உலகின் பிரபலஸ்தர்கள், மனித உரிமை அமைப்புகள், தொழிற்சங்கங்கள் என்பன தொடர்ச்சியாகக் குரல் எழுப்பி வந்த போதிலும், அவர் இன்னமும் நிச்சயமற்ற எதிர்காலத்துடன் தனது வாழ்வைக் கழித்து வருகின்றார்.**

**மேலே பிரசுரமாகியுள்ள ஊடகத்துறை சம்பந்தமான இக்கட்டுரை அவரது நூலான Death Blossoms: Reflections From A prisoner Of Conscience என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது)**

*

# வட மாகாணசபைத் தேர்தலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பும்

**கேள்வி - போர் முடிந்துள்ள சூழலில், நடைபெறப்போகும் வட மாகாண சபைத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற்றால், தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வு கிடைக்கும் தானே?**

**ம. உருத்திரன், சூரிச் நகர், சுவிஸ்**

பதில் – காலத்துக்குப் பொருத்தமானதும் பலரின் மனதில் உள்ளதுமான கேள்வியொன்றைக் கேட்டிருக்கிறீர்கள்.

வட பகுதியில் செயற்படும் பெரிய கட்சிகளில் இருந்து சிறிய கட்சிகள் வரை, விரைவில் நடைபெறப்போகும் வட மாகாணசபைத் தேர்தலை மனதில் கொண்டு அங்கு தீவிர செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வட மாகாணசபைக்கு தேர்தல் நடந்து, அங்கும் ஒரு மாகாணசபை இயங்குமாக இருந்தால், அந்த மாகாண மக்களுக்கு பல நன்மைகள் ஏற்பட வாய்ப்புண்டு. மாகாணசபைகள் மூலம் சாதாரண மக்களின் ஏராளமான பிரச்சினைகளைத் தீர்ப்பதுடன், அபிவிருத்தி நடவடிக்கைகளையும் முன்னெடுக்க முடியும் என்பதற்கு, அரசாங்க ஆதரவுடன் இயங்கும் கிழக்கு மாகாணசபை ஒரு உதாரணமாகத் திகழ்கின்றது.

1987ல் செய்து கொள்ளப்பட்ட இந்திய – இலங்கை உடன்படிக்கையின் கீழான இந்த மாகாணசபைகள் (குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணசபை) அவை அமைக்கப்பட்ட காலத்திலிருந்து தொடர்ச்சியாகச் செயற்பட்டிருந்திருக்குமேயானால், அதன் பின்னர் இருபது வருடங்களாக நடந்த போரினால் ஏற்பட்ட பாரிய அழிவுகளைத் தடுத்திருக்க முடிந்திருக்கும். ஆனால் போரின வெறி கொண்ட அன்றைய ஜனாதிபதி ஆர்.பிரேமதாசவுடன் சேர்ந்த புலிகள், வடக்கு கிழக்கு இணைந்த மாகாணசபையைக் கலைத்து செயற்பட முடியாமல் செய்ததால், தமிழ் மக்கள் எதையுமே அடைய முடியாமல் போய்விட்டதுடன், இருந்ததையும் இழந்து இன்று அனாதைகளாக நிற்கின்றனர்.

'தனக்கு மூக்குப் போனாலும் எதிரிக்கு சகுனப் பிழையாக வர வேண்டும்' என்ற கோதாவில், புலிகள் அன்று அவ்வாறான ஒரு நாச வேலையில் பிரேமதாசவுடன் சேர்ந்து ஈடுபட்டதற்கு ஒரேயொரு காரணம், தமக்கு அரசியல் ரீதியிலும் இராணுவ ரீதியிலும் எதிராகவிருந்த ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கத்தின் கைகளில் வடக்கு கிழக்கு மாகாணசபையின் நிர்வாகம் இருந்ததுதான்.

இப்பொழுது மாகாணங்கள் இரண்டும் பிரிக்கப்பட்ட, பெரியளவில் அதிகாரங்கள் எதுவுமற்ற மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கு வரிந்து கட்டிக்கொண்டிருக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முன்னோடிக் கட்சியான அன்றைய தமிழர் விடுதலைக் கூட்டணி, புலிகள் பிரேமதாசவுடன் சேர்ந்து வடக்கு கிழக்கு மாகாணசபையைக் கலைத்த போது ஒரு கண்டன வார்த்தை கூட சொல்லவில்லை. அது மட்டுமல்ல, மாகாணசபை முறைமை பிரயோசனமற்றது என்றே இந்தத் தமிழ் தலைமைகள் எல்லாம் பிரச்சாரம் செய்தும் வந்தன.

அதன் பின்னர் புலிகளால் தமது பினாமி அமைப்பாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டு, புலிகளே தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என கூட்டமைப்பு பகிரங்கமாக அறிவித்த பின்னரும், தமிழ் பகுதிகளில் மாகாணசபைகளுக்கோ உள்ளூராட்சி அமைப்புகளுக்கோ தேர்தல்கள் நடாத்த புலிகள் அனுமதிக்கவில்லை. அதுமட்டுமல்ல தமிழ் கூட்டமைப்பினர் சுதந்திரமாக தமிழ் பகுதிகளில் நடமாடவே புலிகள் அனுமதிக்கவில்லை.

எந்தவிதமான ஜனநாயக நெறிமுறைகளும் இன்றி, தனிநபர் சர்வாதிகார முறையில் புலிகள் வடக்கு கிழக்கில் நடாத்திய பாசிச முறையிலான ஆட்சியை இந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் எதிர்க்காதது மட்டுமின்றி, பகிரங்கமாக ஆதரித்தும் வந்தனர். அப்படியானவர்கள் 'ஒன்றுமில்லாத' மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட இப்பொழுது கச்சை கட்டுவது எதற்காக என்ற கேள்வி எழுகின்றது.

1947 முதல் இந்த தமிழ் தலைமைகள் தமிழ் காங்கிரசாகவும், தமிழரசுக்கட்சியாகவும் ஏட்டிக்குப் போட்டியாகப் பாராளுமன்றம் சென்ற போதும் சரி, பின்னர் இரண்டு கட்சிகளும் ஒன்றிணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற போர்வையில் பாராளுமன்றம் சென்றபோதும் சரி, அதன் பின்னர் புலிகளின் காலத்திலும் அவர்கள் அழிந்த பின்னரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் பாராளுமன்றம் சென்ற போதும் சரி, தமிழ் மக்களுக்காக ஏதாவது ஒரு சிறு துரும்பைத் தன்னும் தூக்கிப் போட்டார்களா என்றால்,

‘இல்லை’ என்ற பதிலைத் தவிர நீங்கள் வேறு எதனையும் பெற முடியாது.

ஆனால் அதே வேளையில், போர் நடைபெற்ற காலத்திலும், அதன் பின்னரும் அல்லலுற்ற மக்களுக்கு ஏதாவது உதவிகளை அரசின் மூலம் பெற்றுக் கொடுக்க முனைவோரை, ‘துரோகிகள்’ என்று முத்திரை குத்தி, புழுதி வாரித் தூற்றுவதற்கு மட்டும் இந்தத் தமிழ் தலைமைகள் என்றுமே பின் நின்றதில்லை. அப்படியானவர்கள் இப்பொழுது மாகாணசபையைக் கைப்பற்றி என்னத்தைக் கிழிக்கப் போகிறார்கள்? எப்படிப் பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளைத் தமது சொந்த சுகபோக வாழ்க்கைக்குப் பயன்படுத்தி வருகிறார்களோ, அதேபோல மாகாணசபையைக் கைப்பற்றினாலும் தமது சுயலாபத்துக்கே அதைப் பயன்படுத்துவார்கள் என்பது நிச்சயம்.

பாராளுமன்ற உறுப்பினர் பதவிதான் மத்திய அரசு சம்பந்தமானது என ஒருபக்கம் ஒதுக்கி வைத்தாலும், மாகாணசபை அம்மாதிரியான ஒன்றல்ல. அது அந்தந்த மாகாணத்தின் நிர்வாகம், அபிவிருத்தி சம்பந்தமான ஒரு முக்கியமான அமைப்பு. அவ்வகையான அமைப்பு இரண்டு அடிப்படை விடயங்களைக் கொண்டிருக்க வேண்டும். முதலாவது, அது தனது மக்களின் நலன்களை முதன்மைப்படுத்தி மாகாண நிர்வாகத்தை நடாத்த வேண்டும். இரண்டாவது, மாகாணசபை என்பது இலங்கையில் பெரிதும் மத்திய அரசிலேயே தங்கியிருப்பதால், அதன் அதிகாரத்தை வைத்திருப்பவர்கள் பதவியில் இருக்கும் அரசாங்கத்துடன் இணக்கமான போக்கைக் கடைப்பிடிப்பவர்களாக இருக்க வேண்டும். இது இரண்டுமே தமிழ் தேசியக் கூட்டமைப்பிடம் அறவே கிடையாது.

30 வருட யுத்தம் முடிவடைந்த சூழலில் இடம்பெயர்ந்த தமிழ் மக்களை மீளக்குடியமர்த்துவதிலும், புனர்நிர்மாணப் பணிகளை முன்னெடுப்பதிலும், முன்னாள் புலி உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வு அளிப்பதிலும் அரசாங்கம் பாரிய சவால்களை எதிர்நோக்கியது. புலிகளின் யுத்த முயற்சிகளுக்கு ஆதரவு அளித்து வந்த தமிழ் கூட்டமைப்பு, இந்த விடயத்தில் அரசாங்கத்துக்கு எந்தவிதமான ஒத்துழைப்பும் வழங்கவில்லை. மாறாக அரசாங்கம் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களை கொன்று குவித்துவிட்டது என்றும், 3 இலட்சம் பேரை முள்கம்பி வேலிகளுக்குள் அடைத்து வைத்திருக்கின்றது என்றும் பொய்யான எதிர்ப்பிரச்சாரங்களைச் செய்தது. இப்பொழுது கூட இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு ஆக்கபூர்வமான பங்களிப்பு வழங்குவதை விடுத்து, ஜெனீவா மனித உரிமைக் கவுன்சில் கூட்டத்தில் அமெரிக்கா இலங்கைக்கு எதிராக முன்வைத்துள்ள தீர்மானத்துக்கு வக்காலத்து வாங்குவதிலேயே காலத்தைக் கடத்துகிறது.

இப்படியான ஒரு சூழலில் வட மாகாணசபைத் தேர்தலில் மக்கள் தமிழ் கூட்டமைப்பிடம் ஆட்சி அதிகாரத்தை வழங்குவார்களானால், அது தங்கள் தலையில் தாங்களாகவே மண் அள்ளிப்போட்ட கதையாகவே முடியும். ஏனெனில் கூட்டமைப்பினர் மாகாணசபையைப் பயன்படுத்தி வடக்கு மக்களின் வளர்ச்சிக்கு உதவுவதைவிட, அதைப்பாவித்து அரசாங்கத்துடன் ‘போர்’ புரிவதிலேயே காலத்தைக் கழிப்பர். அதன்மூலம் மாகாணசபையை செயலற்ற ஒரு நிலைக்குத் தள்ளி மக்களுக்கு எதுவும் கிடைக்காதபடி பார்த்துக் கொள்வர். தமிழ் தலைமைகளின் (புலிகள் உட்பட) கடந்தகால சரித்திரத்தை எடுத்துப் பார்த்தால், அவர்கள் மக்களுடைய ஒரு சிறு தேவையைக்கூட (குறைந்த பட்சம் ஒரு உப தபால் கந்தோர் நிறுவுவதைக் கூட) அரசாங்கத்திடம் எடுத்துரைத்து பெற்றுக் கொடுத்தது கிடையாது. ‘எமக்கு சோறு அல்ல, சுதந்திரமே முக்கியம்’ எனச் சொல்லி சொல்லித் தமிழ் மக்களின் வாழ்வை குட்டிச் சுவராக்கியதுதான் அவர்கள் செய்த வேலை.

எனவே வரப்போகும் வட மாகாணசபைத் தேர்தலில் என்ன பிரயத்தனப்பட்டாவது தமிழ் தேசியக் கூட்டமைப்பு அதன் நிர்வாகத்தைக் கைப்பற்றாமல் பார்த்துக்கொள்வது, அனைத்து முற்போக்கு – ஜனநாயக சக்திகளினதும் தலையாய பணியாகும். அதைச் சாத்தியமாக்குவதானால் தமிழ் மக்கள் மத்தியிலுள்ள ஜனநாயக தமிழ் கட்சிகளும் இடதுசாரி சக்திகளும் இப்பொழுதிலிருந்தே அதற்கான முன்னேற்பாடுகளில் இறங்க வேண்டும். ‘தமிழ் கட்சிகளின் அரங்கம்’ உயிர் வாழ்ந்திருக்குமாக இருந்தால், பிற்போக்கு இனவாத தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக ஒரு பலம்வாய்ந்த அணியை உருவாக்கி இருக்க முடியும். அதை உணர்ந்துதான் அதை முளையிலேயே கருகச்செய்யும் சதி நடவடிக்கையை தமிழ் கூட்டமைப்பு மேற்கொண்டது. அரங்கத்தை உடைத்துவிட்டு அதில் அங்கம் வகித்த சில கட்சிகளை செல்லாக்காசாக தன்னுடன் இப்பொழுது இணைத்து வைத்திருக்கின்றது.

தமிழ் கட்சிகளின் அரங்கத்தில் சரியான தலைமைத்துவம் இல்லாமல் இருந்தமையே இதற்குக் காரணம். அதில் அங்கம் வகித்த சிலர் கூட்டமைப்புடன் சேர்ந்தால் பாராளுமன்ற உறுப்பினர் பதவியைப் பெறலாம் என்ற நப்பாசையில் வழி தவறிச் சென்றுள்ளனர். ஆனால் அதை நேரடியாகச் சொல்ல முடியாதபடியால், ‘தமிழ் மக்கள் ஓரணியில் ஒற்றுமையாக இருந்தால்தான் உரிமைகளைப் பெற முடியும்’

என்ற புளித்துப்போன காரணங்களைக் கூறுகின்றனர். இன்னும் சிலர் தமிழ் தேசியவாத வெறியில் ஊறிய பழக்க தோசத்தில் தமது தாய்வீடான கூட்டமைப்பிடம் சரணாகதி அடைந்துள்ளனர். அந்த அரங்கத்தைக் காப்பாற்றுவதின் அவசியத்தை உணர்ந்து முன்கையெடுத்துச் செயற்பட்டிருக்க வேண்டியவர்கள், தம்மைப்பற்றிய அதீத தன்னம்பிக்கையாலும் இறுமாப்பாலும் ஏனோதானோ என்று இருந்துவிட்டனர்.

தமிழ் கட்சிகளின் அரங்கத்தைவிட்டு வெளியேறி தமிழ் கூட்டமைப்புடன் வேண்டாப் பெண்டாட்டியாக குடித்தனம் நடத்துபவர்கள் கூட்டமைப்பு ஒருபோதும் தமிழ் மக்களின் பிரச்சினைத் தீர்வுக்காக உழைக்கப் போவதில்லை என்ற உண்மையை பட்டறிவின் மூலம் புரிந்துகொள்ள வேண்டும். தமிழ் கூட்டமைப்பு அரசியல்ரீதியாக பிற்போக்கானது, சுயலாப நோக்குடையது, இனவாத ஐக்கிய தேசியக் கட்சியுடன் கள்ள உறவைக் கொண்டது, ஏகாதிபத்தியத்துக்கு ஆதரவானது என்ற அடிப்படை விடயத்தை, உண்மையாகவே தமிழ் மக்களின் விமோசனத்துக்காக உழைப்பவர்கள் உணர வேண்டும்.

எனவே கடும் பிரயத்தனம் எடுத்தாவது, மீண்டும் ஜனநாயக தமிழ் கட்சிகளின் அரங்கத்தை உருவாக்குவதற்கு அனைத்து முற்போக்கு – ஜனநாயக சக்திகளும் உழைக்க வேண்டும். அதை இப்பொழுதே உடனடியாக ஆரம்பிக்க வேண்டும். அதை விடுத்துவிட்டு 'வெள்ளம் வந்த பின்னர் அணை கட்டுவது போல', வட மாகாணசபை தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் கூட்டணி அமைக்க ஓடித்திரிவதால் எந்தப் பிரயோசனமும் ஏற்படப்போவது இல்லை. அவ்வாறான ஒரு சூழ்நிலை ஏற்படுமாக இருந்தால், அது தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கே சாதகமாகப் போய்முடியும் என்பதை, இதில் அக்கறையுள்ள அனைவரும் புரிந்துகொண்டு செயற்படுவது காலத்தின் தேவையாகும். *

# சர்க்கரை நோய் - சில விபரங்கள்

இந்த வருடம் இந்தியாவில் ஒன்பது லட்சத்து 83 ஆயிரம் பேர் சர்க்கரை நோயால் இறந்திருக்கிறார்கள். அந்த எண்களில் ஒன்றாக மாறாமல் இன்னமும் தப்பிப் பிழைத்திருக்கும் ஆறு கோடி பத்து லட்சம் பேரில் நானும் ஒருவன்.

உலக அளவில் ஏழு செகண்டுக்கு ஒருவர் வீதம் சர்க்கரை நோயால் செத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த வருடம் மொத்த சாவு நான்கு கோடி 60 லட்சம். பெரியவர்களில் ஐந்து பேருக்கு ஒருவர். உலக அளவில் சர்க்கரை நோயால் ஆகும் செலவு மட்டும் ஸ்பெக்ட்ரம் ஊழல் நஸ்டத்தைப் போல, சுமார் இருபது மடங்கு – 23 லட்சத்து 25 ஆயிரம் கோடி ரூபாய்கள்!

எனக்கு சர்க்கரை நோய் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டது மிகவும் தற்செயலாகத்தான். அப்போது எனக்கு 42 வயது….எனது 15 வருட அனுபவத்தில் சர்க்கரை நோய் நிச்சயம் கொடியது. சர்க்கரை நோய் உடலின் எல்லாப் பாகங்களையும் பாதிக்கக்கூடியது. வேறு எந்த நோய்க்கும் இந்தத்தன்மை இல்லை. சர்க்கரை அதிகமானாலோ, மிகவும் குறைந்தாலோ மனநிலையிலும் உடல் நிலையிலும் ஏற்படும் மாற்றங்களைப் பற்றி – தனிக் கட்டுரையே எழுதலாம்.

சர்க்கரை நோய் பற்றிய தவறான கருத்துகளில் ஒன்று இன்சுலின் ஊசி போடுவது பற்றியதாகும். எனக்கும் ஆரம்ப காலத்தில் நண்பர்கள் சொன்ன யோசனை என்பது – எத்தனை நாட்களுக்கு மாத்திரைகள் மூலம் கட்டுப்படுத்துகிறாயோ நல்லது. அறுபது வயதுக்கு மேல் இன்சுலின் போட ஆரம்பிக்கிற மாதிரி பார்த்துக்கொள் என்றார்கள்.

நானும் பயபக்தியுடன் ஏராளமான மாத்திரைகளையே தயங்காமல் விழுங்கி வந்தேன். 57 வயதிலேயே இன்சுலினுக்கு வந்துவிட்டேன். காரணம் சர்க்கரை சரி செய்யும் மாத்திரைகளின் பக்க விளைவுகள் சிறுநீரகத்தைப் பாதிக்கின்றன. சிறுநீரகக் கற்கள் உருவாகின்றன. சிறுநீரகத்தின் வேலை அதிகமாவதால், அது தளர்ந்து, யூரியா அளவு கூடுகிறது. இன்சுலின் ஊசியில் இந்தச் சிக்கல் இல்லை. நேரடியாக ரத்தத்தில் செலுத்தப்பட்டு விடுவதால், சிறுநீரகத்துக்கு வேலை இல்லை. எனவே இப்போதெல்லாம் தொடக்கத்திலேயே இன்சுலின் போடுவதைப் பல மருத்துவர்கள் ஊக்குவிக்கிறார்கள்.

சரியான உணவுப் பழக்கமும், மன அழுத்தமும் இல்லாத வாழ்க்கை முறையும் மட்டுமே சர்க்கரை நோயிலிருந்தும் அதன் ஜோடி நோய்களிலிருந்தம் நம்மைக் காப்பாற்ற முடியும். இதில் முதலாவதை ஓரளவு பின்பற்றும் என்னால் இரண்டாவதைச் செய்ய முடிவதில்லை. கருணாநிதி, ஜெயலலிதா, மன்மோகன்சிங், அத்வானி போன்றவர்களே நமக்கு ஆட்சியாளர்களாக வாய்க்கும் நிலையில் எப்படி மன அழுத்தமும் மன உளைச்சலும் இல்லாமல் இந்தத் தேசத்தில் இருக்க முடியும்?

**அரசியல் விமர்சகர் ஞானி 'கல்கி' இதழில் வாராவாரம் எழுதிவரும் 'ஓ பக்கங்கள்' கட்டுரைத் தொடரின் ஒரு பகுதி**

**2003**இல் ஈராக் மீதான அமெரிக்காவின் போரில் பங்குபற்றாது ஜீன் செறிற்றியன் (முன்னாள் கனடியப் பிரதமர்களில் ஒருவர் – மொழிபெயர்ப்பாளர்) நிராகரித்தமையானது, நல்லதும் மிகவும் பிரபல்யமான விடயங்களில் ஒன்றுமாகும். ஐக்கிய நாடுகள் சபையின் அங்கீகாரமின்றி கனடா அதில் பங்குபற்றாது என, அவர் ஜோர்ஜ். டபிள்யூ. புஸ்சிடம் (அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி – மொர்) பவ்வியமாகவும், அதேவேளை உறுதிபடவும் கூறினார்.




# ஈரான் மீதான யுத்தத்தை காபர் எதிரொலிக்கிறார்!

**– கறுான் சித்தீக் (ரொறன்ரோ ஸ்ரார்) –**

ஈரானின் அணுசக்தி வளங்கள் மீது இஸ்ரேலோ அமெரிக்காவோ அல்லது இரண்டும் சேர்ந்தோ தமது கூட்டாளி நாடுகளின் உதவியுடன் குண்டுசீசித் தாக்குதல் நடாத்த வேண்டும் என்ற அமெரிக்க வலதுசாரிப் போர்வெறியர்களின் கருத்தை ஸ்ரீபன் காபர் (தற்போதைய கனடியப் பிரதமர் – மொர்) எதிரொலிப்பதை இப்போது நாம் பார்க்கின்றோம். பாதுகாப்புச்சபையின் அங்கீகாரமற்ற இத்தகைய போர், சட்ட விரோதமானதும் சர்வதேச நெறிமுறைகளுக்குப் புறம்பானதுமாகும்.

வெள்ளிக்கிழமை (மார்ச் 02, 2012) இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெத்தனியாகுவுடன் ஒட்டாவில் தாம் பங்குபற்றிய ஒரு செய்தியாளர் சந்திப்பில், மிகத் தெளிவான ஒரு கேள்விக்கு மிகத் தெளிவான ஒரு பதிலைத் தருவதை காபர் நிராகரித்துவிட்டார்.

ஈரான் மீது இஸ்ரேல் ஒரு தலைப்பட்சமாகத் தாக்குதல் நடாத்தினால் கனடா அதை ஏற்குமா – “நீங்கள் அதை ஆதரிப்பீர்களா?” எனக் கேட்கப்பட்டது. அதற்கு அவர் “இஸ்ரேல் தன்னைப் பாதுகாப்பதற்கு உள்ள உரிமையை கனடா ஆதரிக்கும்” எனப் பதிலளித்தார். இதன் அர்த்தம் என்ன? இஸ்ரேல் ஈரானை வலிந்து தாக்க முடியுமா? மேலும் அவர் கூறுகையில், கனடா இந்தப் பிரச்சினையில் ஒரு சமாதானபூர்வமான தீர்வை ஆதரிக்கும் என்றும் சொன்னார்.

அவரும் அவரது அமைச்சர்கள் சிலரும், இஸ்ரேலும் கடைகோடி அமெரிக்க குடியரசு வேட்பாளர்களும் வசைபாடுவதற்கு முன்பே ஈரான் மீது வெறுப்பூட்டும் வகையில் பேசியிருந்தனர்.

சமீபத்தில் ஈரான் பேச்சுவார்த்தை மேசைக்குத் திரும்புவதற்கான விருப்பத்தை வெளிப்படுத்தியிருந்தது. ஆனால் நெத்தனியாகு இதை ஒரு தந்திரம் என வர்ணித்து, “சர்வதேச சமூகம் இதில் சிக்கிவிடக்கூடாது” என அதை நிராகரித்த போது, காபர் அமைதியாக நின்று கொண்டிருந்தார்.

ஒட்டாவா ஈரான்மீது தனது கடுமையான தடைகளைக் கொண்டிருக்கிறது. ஆனால் யுத்தத்துக்காக தள நிலைமையைத் தயார் படுத்துவதற்கே காபர் முன்னுரிமை கொடுக்கின்றார். அவர் ஈரான் இந்தப் பூமிக்கே அபாயகரமான ஒன்று என இனங்காணுகிறார். (ஈரான் கடந்த சில தசாப்தங்களாக எவரையும் தாக்கியது கிடையாது)

வெளிவிவகார அமைச்சர் ஜோன் பெயிட் ஈரான் மீதான இராணுவ நடவடிக்கையை நியாயப்படுத்துகிறார். இதை அவர் ஐ.நா.பொதுச்சபைக் கூட்டத்தின் போதும், கடந்த மாதம் இஸ்ரேலுக்கு மேற்கொண்ட 5 நாள் விஜயத்தின் போதும் குறிப்பிட்டார்.

இதுபற்றி கருத்து வெளியிட்ட ரொறன்ரோ பல்கலைக்கழகத்தின் மத்திய கிழக்கு கற்கைகளுக்கான பேராசிரியர் ஜிம் ரெய்லி பின்வருமாறு கூறினார்.
“இவர்கள் இந்த மாதிரியான சமாந்திரங்களை முன்வைக்கிறார்கள் என்றால், அவர்களிடம் நியாயமான வாதங்கள் இல்லையென்பதுதான் அதன் அர்த்தமாகும். அவர்கள் பீதியூட்டும் தந்திரங்களை உபயோகிக்கிறார்கள்”

ஈரானியன் கனடியன் காங்கிரஸ் காபரிடம் விடுத்துள்ள வேண்டுகோளில், “ஈரானுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையை ஆதரிக்க வேண்டாம். அது நடக்குமாக இருந்தால் நினைத்துப் பார்க்க முடியாத பேரழிவு ஏற்படும்” எனச் சுட்டிக்காட்டியுள்ளது. இதேபோன்ற கருத்தை மொன்றியலைத் தளமாகக் கொண்டு செயற்படும் ‘மத்திய கிழக்கில் நீதிக்கும் சமாதானத்துக்குமான கனடியர்கள் அமைப்பும்’

தெரிவித்துள்ளது. (கனடிய சமாதானக் கூட்டமைப்பு மார்ச் 04ஆம் திகதி ''ஈரானைத் தாக்கக்கூடாது'' என்ற தொனிப் பொருளில் ரொறன்ரோவிலுள்ள அமெரிக்கத் துணைத் தூதரகத்தின் முன்னால் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றை நடாத்தியது)

ஈரானுக்கான முன்னாள் கனடியத் தூதுவர் முண்டி கூறுகையில், ''பல தசாப்தங்களில் முதற்தடவையாக ஒரு கனடியப் பிரதமர், சர்வதேச விவகாரங்களில் சமாதானத்துக்கான இராஜதந்திர வாய்ப்புக்களைக் குறைத்து மதிப்பிடுகிறார்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

2006இல் லெபனானுக்குள் இஸ்ரேல் நுழைந்ததை ஆதரித்ததுடன், 2009 – 10இல் காஸா மீது இஸ்ரேல் தாக்குதல் நடாத்தியதை ஆதரித்தும், ஈராக் மீதான போரில் கனடா ஈடுபட வேண்டும் எனவும் காபர் கோரியிருந்தார். தற்போது ஈரான் மீதான போரில் கனடா சிக்கும் நிலை காணப்படுகிறது.

இந்த விடயத்தில் புதிய ஜனநாயகக் கட்சியினரும், லிபரல் கட்சியினரும் பெரும்பாலும் மௌனம் சாதிக்கின்றனர். அவர்களும் ஈரான் மீதான சட்ட விரோதமான யுத்தத்தை ஆதரிக்கின்றார்களா? அப்படியில்லையானால் அவர்கள் ஏன் அதைத் தெளிவாகச் சொல்லக்கூடாது?

**(கறூன் சித்தீக் (Haroon Siddiqui) 'ரொறன்ரோ ஸ்ரார்' பத்திரிகையின் ஞாயிறு பதிப்பின் பத்தி எழுத்தாளராவார். 2012 மார்ச் 04ஆம் திகதி பதிப்பில் அவர் எழுதியதின் சுருக்கம் மேலே தரப்பட்டுள்ளது)**

*

# உலகின் பிரதான மொழிகள்

''ஆங்கில (Angle) இனத்தவரின் மொழியாதலால் ஆங்கிலம் எனப் பெயர் கொண்டது. இம்மொழி கடல் கடந்து வந்த ஜெர்மானிய இனத்தவரான ஆங்கில் எனும் வந்தேறு குடியினரால் ஐந்தாம் நூற்றாண்டின் நடுப்பகுதி ஆரம்பத்தில் பிரித்தானிய தீவுக்குக் கொண்டுவரப்பட்டது. இது பிறப்பியல் வழியில் ஜெர்மானிய மொழியாகவும், பண்பியல் முறையில் ரோமானிய மொழியாகவும் இருக்கிறது. மிகச்சிறிய நாடொன்றின் மொழியாக இருந்தும், காலனித்துவ முறையினாலும், குடியேற்றப் பரம்பரையினாலும் பிரித்தானியத் தீவுகள் தொட்டு, வட அமெரிக்கா, அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா முதலான நாடுகள் வரை ஆங்கிலம் பரவியது. இவ்வாறு பரவிய ஆங்கிலம் எல்லை விஞ்சிய ஆங்கிலம் (Extra Territory English) என அழைக்கப்படுகிறது. பிரித்தானியாவின் ஆட்சிக்கு உட்பட்டிருந்து விடுபட்ட நாடுகளான இந்தியா, இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, ஆபிரிக்கா, கரீபியன் தீவுகள் முதலான நாடுகள் வரை வழங்கப்படும் ஆங்கிலம், புதிய ஆங்கிலம் (New English) என அழைக்கப்படுகிறது.

-சி.சச்சிதானந்தன் (இன்னுமொரு காலடி)

உலக மொழிகளைப் பொறுத்தவரையில் ஆங்கிலம் உலக நாடுகள் பலவற்றில் பேசப்பட்டாலும், தாய்மொழி என்ற வகையில் அதிகமான மக்கள் பேசும் மொழியாக சீன மொழியே இருக்கின்றது.

ஸ்பானிய மொழி 20 நாடுகளில் பேசப்படுகிறது. தென் அமெரிக்காவைப் பொறுத்தவரை பிரேசில் (அங்கு போர்த்துக்கீச மொழி பேசப்படுகிறது) தவிர்ந்த ஏனைய நாடுகள் அநேகமானவற்றில் ஸ்பானிய மொழியே பேசப்படுகிறது.

ஆங்கிலம் 47 நாடுகளில் வழக்கில் உள்ளது. 30 நாடுகளில் பேசப்படும் பிரெஞ்சு மொழி, உலக மொழிகளின் வரிசையில் இரண்டாவது ஸ்தானத்தில் இருக்கின்றது.

நமது தமிழ் மொழி ஆசியா, ஆபிரிக்கா அடங்கலாக 18 நாடுகளில் பேசப்படுகிறது. 7 கோடிக்கும் அதிகமான மக்கள் தமிழைத் தாய்மொழியாகப் பேசி வருகின்றனர். இலங்கைத் தமிழரின் புலப்பெயர்வுடன் தற்பொழுது தமிழ் ஐரோப்பிய, அமெரிக்க, அவுஸ்திரேலியக் கண்டங்களிலும் பேசப்படும் மொழியாக இருக்கின்றது.

*

14ம் பக்கத்தொடர்ச்சி...

விரைந்து தீர்வு காண்பதின் மூலம், அனைத்து இன மக்களையும் ஓரணியில் திரட்டி இலங்கைக்கு எதிரான ஏகாதிபத்திய சதி முயற்சிகளை வெற்றிகரமாத் தோற்கடிக்க முடியும்.

இலங்கைக்கு எதிராகத் தீர்மானம் கொண்டு வந்த அமெரிக்காவை வசை பாடுவதிலோ, நம்பிக்கைத் துரோகமாக காலை வாரிய இந்தியாவை கண்டிப்பதிலோ காலத்தை விரயம் செய்வதைவிட, இலங்கை அரசு இனப்பிரச்சினைக்கு ஒர் உரிய தீர்வைக் காண்பதில் கரிசனையுடன் செயற்படுவதே இன்றைய உடனடித் தேவையாகும்.

(இலங்கைக்கு எதிரான அமெரிக்கத் தீர்மானம் இலங்கையிலும், தென்னாசியப் பிராந்தியத்திலும் எதிர்காலத்தில் உருவாக்கப்போகும் தாக்கங்கள் குறித்த விரிவான ஆய்வுக்கட்டுரை வானவில்லின் அடுத்த இதழில் இடம் பெறும்)

*

முன்பக்கத்தொடர்ச்சி...
பெற்றுள்ளமை நிச்சயமாக அமெரிக்காவுக்கு ஒரு தோல்விதான். தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்த 15 நாடுகள் மட்டுமல்லாமல், வாக்களிப்பில் கலந்து கொள்ளாத 8 நாடுகளும்கூட அமெரிக்காவின் தீர்மானத்தை ஆதரிக்கவில்லை என்பதே உண்மையாகும். உதாரணமாக, ஐ.நாவின் யுனெஸ்கோ அமைப்பில் பாலஸ்தீனம் இடம்பெறுவதை அமெரிக்கா தடுக்க எவ்வளவோ பிரயத்தனம் செய்தும், பாலஸ்தீனம் மிகப்பெரும்பான்மையான ஆதரவுடன் உறுப்புரிமை பெற்றதிலிருந்தே, உலக நாடுகள் மத்தியில் அமெரிக்காவின் செல்வாக்கை அறிந்தகொள்ள முடியும்.

இந்தியா அமெரிக்கத் தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்திருக்குமானால், நிச்சயம் வாக்களிப்பில் கலந்து கொள்ளாமல் ஒதுங்கி இருந்த நாடுகளும் அமெரிக்கத் தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்திருக்கக்கூடும். அதன் மூலம் அமெரிக்கத் தீர்மானம் நிச்சயம் தோற்கடிக்கப்பட்டிருக்கும். இந்தியாவைப் பொறுத்தவரையில் அமெரிக்கத் தீர்மானத்துக்கு எதிராக வாக்களிப்பது எனவே முதலில் தீர்மானித்திருந்தது. இந்தியாவின் இந்த நிலைப்பாட்டை இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணாவும், நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜியும் பாராளுமன்றத்தில் தெளிவாகக் கூறியிருந்தனர். ஆனால் காங்கிரஸ் கட்சியின் தமிழ்நாடு கமிட்டியும், அவ்வரசில் அங்கம் வகிக்கும் தி.மு.க. உட்பட அனைத்து தமிழக அரசியல் கட்சிகளும் மத்திய அரசை மிரட்டியதால் (பிளாக் மெயில்?) வேறுவழியின்றி இந்திய அரசு தனது முன்னைய நிலைப்பாட்டை மாற்ற வேண்டியதாகிவிட்டது.

உண்மையில் இந்தியாவின் நிலைப்பாடு இலங்கைக்குச் சார்பானது என்ற போதிலும், இந்தியா எடுத்த இரண்டுபட்ட நிலை அதன் வரலாற்றில் முதற்தடவையாக அதற்கு ஏற்பட்ட மிகப்பெரும் இராஜதந்திரத் தோல்வியாகும். இதற்கு முதல் இந்தியா எந்தவொரு தனிப்பட்ட நாட்டுக்கும் எதிரான தீர்மானங்களை ஆதரித்து வாக்களித்தது கிடையாது. அத்தோடு தனது அண்டைய நட்பு நாடான இலங்கைக்கு எதிராகவும் செயல்பட்டது கிடையாது. அந்த வகையில் இந்தியா சூழ்நிலைக் கைதியாகி இலங்கைக்கு எதிராக வாக்களித்ததின் மூலம், வருங்காலத்தில் மிகவும் பாரதூரமான பிரச்சினைகளை அது எதிர்நோக்கக்கூடும்.

ஏனெனில், முன்னர் ஏகாதிபத்திய சக்திகள் விடுதலைப் புலிகள் மூலம் இலங்கையில் ஒரு தனிநாட்டை உருவாக்கி அதைத் 'தென்னாசியாவின் இஸ்ரேல்' ஆக உருவாக்கத் திட்டமிட்டிருந்தனர். ஆனால் இலங்கை அரசு அவர்களது கனவை தகர்த்தெறிந்துவிட்டது. ஆனால் இப்பொழுது அந்த சக்திகள் முழு தமிழக அரசியல் சக்திகளையும் தமது நிலைப்பாட்டுக்கு ஆதரவாக 'வென்றெடுத்ததின்' மூலம், இலங்கைத் தமிழர்களை மட்டுமின்றி, தமிழகத் தமிழர்களையும் உள்ளடக்கிய மிகப்பெரிய அளவிலான தனித் தமிழ் அரசு ஒன்றுக்கான அத்திவாரத்தை வெற்றிகரமாக இட்டுள்ளனர். அதன் மூலம் எதிர்காலத்தில் இந்தியா பாரதூரமான பிரச்சினைகளைத் தனது தென்பகுதியில் எதிர்நோக்கப் போகிறது.

அமெரிக்கா நிறைவேற்றியுள்ள இலங்கைக்கு எதிரான தீர்மானத்தின் மூலம், எதிர்காலத்தில் பல பாரிய அரசியல் மாற்றங்கள் நிகழ வாய்ப்புண்டு. இந்தத் தீர்மானத்தின் காரணமாக இலங்கை மக்கள், முக்கியமாக இலங்கையின் சனத்தொகையில் 72 வீதமாக இருக்கும் சிங்கள மக்கள் முன்னொருபோதும் இல்லாத அளவுக்கு அமெரிக்க எதிர்ப்பாளர்களாக மாறக்கூடிய வாய்ப்புண்டு. அதேநேரத்தில், தமிழ் தேசியக் கூட்டமைப்பும், புலம்பெயர் புலி அமைப்புகளும், தமிழக அரசியல் கட்சிகளும் எடுத்த இலங்கையின் தேசிய நலன்களுக்கு எதிரான நிலைப்பாட்டால், யுத்தம் முடிவடைந்த பின்னர் இலங்கையில் உருவாகி வந்த தேசிய இனங்களுக்கிடையிலான ஐக்கியம் பெரும் பின்னடைவைச் சந்திக்கும். தமிழர்கள் மீது பெரும்பான்மை சிங்கள மக்களுக்கு நீண்ட காலமாக இருந்து வந்த சந்தேகம் மேலும் வலுப்பெறும்.

மறுபக்கத்தில் இந்தியா எடுத்த நிலைப்பாட்டால், இலங்கை மக்கள் வரலாற்றுக் காலம் முதல் இந்தியா மீது கொண்டிருந்த சந்தேகமும் வலுப்பெறும். ஏகாதிபத்திய சக்திகள் இலங்கையில் நல்லிணக்கத்தையும் சமாதானத்தையும் உருவாக்கவே இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்ததாகச் சொன்னாலும், உண்மையில் அதற்கெதிரான நிலைமைகளே உருவாகப் போகின்றன. அதேநேரத்தில் இந்தத் தீர்மானத்தின் மூலம் இலங்கையில் தமது பிடியை இறுக்கலாம் என்ற அவர்களது கனவும் நிறைவேறப்போவதில்லை. மாறாக இலங்கையில் ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலையே மோலோங்கப் போகின்றது.

மறுபக்கத்தில் ஏகாதிபத்திய சக்திகள் இலங்கையில் தேவையற்ற முறையில் மூக்கை நுழைப்பதற்கான சூழலை ஏற்படுத்திக் கொடுத்ததில், இலங்கை அரசுக்கும் முக்கியமான பங்கு உண்டென்பதை மறுக்க முடியாது. போர் முடிவுற்று மூன்று வருடங்களாகியும் இனப்பிரச்சினைக்கு விரைந்து ஒரு தீர்வைக் காண்பதில் இலங்கை அரசின் அசமந்தப்போக்கு, பிற்போக்கு பிரிவினைவாத சக்திகளுக்கும் அவர்களின் பின்னால் நின்ற ஏகாதிபத்திய சக்திகளுக்கும் வாய்ப்பைக் கொடுத்துள்ளது. இந்தச் சூழ்நிலையில் தேசிய இனப்பிரச்சினைக்கு

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...

# அந்நியப் படைகளின் ஆப்கான் மீதான தொடர் அத்துமீறல்கள்

**2012** மார்ச் 11ஆம் திகதி, ஆப்கானிஸ்தானில் நிலைகொண்டுள்ள அமெரிக்கப் படைகளைச் சேர்ந்த இராணுவ வீரன் ஒருவன் கண்டபடி பொதுமக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில், குழந்தைகள், வயோதிபர்கள், பெண்கள் உட்பட 16 பேர் பலியாகியுள்ளனர். தலிபான்களுக்கும் ஆப்கானில் நிலை கொண்டுள்ள அந்நியப் படையினருக்கும் அடிக்கடி மோதல்கள் நிகழ்ந்து வரும் கந்தகார் மாநிலத்திலுள்ள கிராமம் ஒன்றிலேயே இந்தக் கோரச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. இந்தச் சம்பவத்தின் காரணமாக ஏற்கெனவே அங்கு நிலை கொண்டுள்ள அமெரிக்க மற்றும் நேட்டோ படைகள் மீது சீற்றம் கொண்டுள்ள ஆப்கானிய மக்கள் மேலும் கோபம் அடைந்துள்ளனர்.

இதற்கு முன்னரும் அங்குள்ள வெளிநாட்டுப் படைகள் கிராமங்கள் மீதும், திருமண வைபவங்கள் போன்ற பொது நிகழ்ச்சிகள் மீதும் விமானங்கள் மற்றும் பீரங்கிகள் மூலம் தாக்கியதில் பல நூற்றுக்கணக்கான பொதுமக்கள் பலியாகி வந்துள்ளனர். தற்போது நடைபெற்ற தாக்குதல் அமெரிக்க இராணுவ வீரர்கள் குழு ஒன்றினால் மேற்கொள்ளப்பட்டதாக சில ஆப்கான் கிராமவாசிகள் தெரிவித்திருந்த போதிலும், தனி ஓர் இராணுவ வீரனாலேயே இந்தப் படுகொலைகள் நடாத்தப்பட்டதாக அமெரிக்க இராணுவத் தலைமையகம் அறிவித்துள்ளது.

தலிபான்களுக்கும் அந்நியப் படைகளுக்கும் இடையில் நடைபெறுகின்ற யுத்தத்தின் இடையில் சிக்கி சொல்லொணாத் துயரம் அனுபவித்து வரும் ஆப்கானிய மக்கள், அமெரிக்க சிப்பாய் ஒருவன் தற்போது நடாத்தியுள்ள துப்பாக்கிப் பிரயோகத்தால் மேலும் அச்சமும் ஆத்திரமும் அடைந்துள்ளனர்.

முன்னதாக, கடந்த மாதம் ஆப்கானிலுள்ள அமெரிக்க இராணுவத்தளமொன்றில் சில இராணுவ வீரர்கள் இஸ்லாமிய மதத்தினரின் புனித நூலான குர்ரான் உட்பட பல சமய நூல்களை தீயிட்டுக் கொளுத்திய சம்பவம், ஆப்கானிய மக்கள் மத்தியில் கோப அலைகளை எழுப்பியிருந்தது. இந்தச் சம்பவத்தால் ஆப்கானிய மக்கள் மத்தியில் ஏற்பட்ட கொந்தளிப்பைத் தணிப்பதற்காக அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா ஆப்கானிய மக்களிடம் பகிரங்க மன்னிப்புக் கோரியிருந்தார். அதற்கு முன்னதாக போரில் இறந்த சில தலிபான் போராளிகளின் உடல்கள் மீது அமெரிக்கச் சிப்பாய்கள் சிலர் சிறுநீர் கழிக்கும் அநாகரிகமான ஒளிக் காட்சிகள் ஊடகங்களில் வெளியாகி பரபரப்பையும் கண்டனத்தையும் எழுப்பியிருந்தன.

தற்போதைய 16 பேர் படுகொலையை நடாத்திய அமெரிக்க போர்வீரன் வாசிங்டனிலுள்ள லெவிஸ் – மெக்சோட் கூட்டுப் படைத்தளத்தைச் சேர்ந்தவன் எனக் குறிப்பிடும் அமெரிக்க இராணுவ செய்தித்தாளான 'ஸ்ரார் அன்ட் ஸ்றைப்', 2010இல் "இராணுவத்திலுள்ள மிகவும் மோசமான தளம்" என அந்தத்தளத்தை வர்ணித்துள்ளது. 2010இல் மூன்று ஆப்கானிய பொதுமக்களைச் சுட்டுக் கொன்ற காரணத்துக்காக தண்டனைக்குள்ளான 4 இராணுவ வீரர்கள் இந்த முகாமைச் சேர்ந்தவர்களே எனத் தெரிய வருகிறது.

இந்தவிதமான பொதுமக்கள் மீதான தாக்குதல்களை, ஆப்கானிய ஜனாதிபதி ஹமீட் கர்சாய் உட்பட பலரும் வன்மையாகக் கண்டித்துள்ளனர். இவ்வகையான தாக்குதல்கள் அங்கு நிலைகொண்டுள்ள தமது படையினருக்கு பாதுகாப்பற்ற ஒரு நிலையைத் தோற்றுவிக்கக்கூடும் என கனடிய இராணுவ நிபுணர்களும், முன்னணி கனடிய ஊடகங்கள் சிலவும் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

வியட்நாமை அமெரிக்க ஆக்கிரமித்திருந்த காலத்திலும் 'மைலாய் கிராமப் படுகொலை' உட்பட, பல படுகொலை நிகழ்ச்சிகளை அமெரிக்க இராணுவம் அங்கு அரங்கேற்றியிருந்தது. ஆக்கிரமிக்கப்பட்ட நாட்டு மக்கள் மீதான விரோத மனப்பான்மை, அந்நிய நாடொன்றில் தேவையில்லாமல் போரிடுவது. நீண்டகாலம் குடும்பத்தைப் பிரிந்திருப்பது, போதைவஸ்துப் பாவனை, இராணுவ உயரதிகாரிகளின் அடக்குமுறை, விரக்தி என்பனவே இராணுவ சிப்பாய்கள் இவ்வாறு கட்டுமீறிய செயல்களில் ஈடுபடுவதற்கான காரணங்கள் என, வியட்நாம் போரின் போது சில உளவியலாளர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

1965 முதல் 1975 வரை தனது நேச நாடுகளின் படை உதவியுடன், எல்லாவிதமான நவீனரக ஆயுதங்களையும் பாவித்து வியட்நாம் போரில் ஈடுபட்ட அமெரிக்கா, இறுதியில் சுமார் 20 லட்சம் வியட்நாம் மக்களைக் கொன்று குவித்துவிட்டு, 1975இல் அந்த நாட்டைவிட்டு தோல்வியுடனும் அவமானத்துடனும் வெளியேறியது. ஆப்கான் விடயத்திலும் அந்த நாட்டு மக்களிடம் அவர்களது நாட்டை ஒப்படைத்துவிட்டு, அங்குள்ள அந்நியப்படைகள் முற்றுமுழுதாக வெளியேறுவதே, ஆப்கான் பிரச்சினை தீர்வதற்கான வழி என, போருக்கு எதிரான பல அமைப்புகள் வலியுறுத்தி வருகின்றன.

**- சேவற்கொடியோன்**